# குடும்ப சாயலை தரித்துக் கொள்ளுங்கள்

## BEARING THE FAMILY IMAGE



BETTY BURTON CHOATE

*Published By*

**J.C. CHOATE PUBLICATIONS**

Madurai, India.

**BEARING THE FAMILY IMAGE** (Tamil)
Author : **Betty Burton Choate** (USA)

© Copyright Reserved

First Print : October 2006
Language : Tamil

Printed and Distributed by
**P.C. Philemon Rajah** (M.A., M.Th.,)
(Editor - Kirubaiyulla Varthai, T.V. Speaker)

Translation : V. Kingsly Rajah
Layout Design : Beverly Lydia
Proof Reading : Antony Raj

**Order from :**

**Kirubaiyulla Varthai**
P.O. Box. 15, 45-C/1, Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625 010. India.
E-Mail : graciousword@hotmail.com
Cell : 92 4421 4421 Visit : www.graciousword.org

*Author's Foreword...*

# ஆசிரியரிடமிருந்து...

உலகத்தோற்றமுதலே தேவனால் முன்குறிக்கப்பட்டது என்னவெனில், இவ்வுலகில் கிறிஸ்துவின் ஒரே இலக்கை சாத்தியமாக்குவதே. அதாவது தன்னுடைய குமாரனின் சாயலில் ஜனங்களை உருமாற்றுவதே.

பல நூற்றாண்டுகளாக அநேகர் "கிறிஸ்துவைப்போல" (Christ like) என்ற பெயரை சூட்டிக் கொண்டுள்ளனர்; ஆனால் அப்படி பெயரை வைத்துக்கொண்டு சற்றும் சம்பந்தமில்லாமல் உள்ளனர். பெயரை சூட்டிக்கொள்வதோ அல்லது ஆராதிக்க கூடுவதோ அல்லது உபதேசத்தை (கொள்கை) போதிப்பதோ மட்டும் கிறிஸ்தவத்தின் கரு ஆகாது. உண்மையான மையம் என்னவெனில், ஒருவர் தன்னுடைய சுயரூபத்தை ஒழித்துவிட்டு, கிறிஸ்துவின் சாயலை அணிந்து கொள்வதாகும். அப்படி செய்யும்போது, முதிர்ச்சியடைந்த நிலையில் கிறிஸ்துவின் வாழ்வு அவரை பின்பற்றுபவர்களின் உடலில் இருந்து பிரகாசிக்க வேண்டும். "கிறிஸ்து நம்மில்" என்றால், நாம் அந்த பெயரை பெருமையுடன் (மகிமையுடன்) அணிந்து கொண்டு உண்மையுடன் நாம் ஆராதித்து, பரிசுத்தத்துடனும் அன்புடனும் போதிப்பதை உறுதி செய்வதாகும். ஆனால் இவை அனைத்தும் முழு சாயலின் விளைவே தவிர, உள்ளே ஒன்றுமில்லாமல் வெறும் வெளிப்புற மாற்றம் மட்டுமல்ல.

கிறிஸ்துவின் சாயலில் நாம் வளரும்போது, அவருக்குள் உருவாக வேண்டிய வாழ்க்கை முறையின் நடைமுறை மற்றும் உன்னதமான வாழ்வை தெளிவாகக் காட்டும் ஆசையுடன் இந்த பாடப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

தேவனுடைய வார்த்தை எவ்வாறு இவ்வுலகில் மனிதனின் எல்லா தேவைகட்கும் முழுமையான பதில் கொடுக்கிறதென்றும், வரப்போகின்ற உலகத்திற்காக இந்த வாழ்க்கையில் எவ்வாறு அவருடைய வார்த்தை அறிவுரை தருகிறதென்றும் ஜனங்கள் உணர்ந்து, புரிந்து கொண்டால் தாங்களே சந்தோஷமாக, கிறிஸ்தவர்களாய் வளருவதற்கென்று பயிற்சி செய்வார்கள்.

இந்த அடிப்படை சத்தியங்களை எளிமையாக அறியவும், குறிப்பாக புதிய கிறிஸ்தவர்களின் பிரயோஜனத்திற்காகவும் தேவனுடைய குடும்பத்தில் பிறக்காதவர் களுக்காகவும் இந்த படிப்பினை உதவியாக இருக்கும் என்பது என்னுடைய ஜெபம்!

**பெட்டி பர்டன் சோட்**
(Betty Burton Choate)

*The Publisher's Statement...*

# பிரசுரிப்பவரிடமிருந்து...

தன்னுடைய மனைவியின் புத்தகத்திற்கு கருத்து தெரிவிக்கும் வாய்ப்பு ஒருவருக்கு எத்தனைமுறை கிடைக்கும்? அடிக்கடி கிடைக்காது; ஆனால் பெட்டியை (Sis. Betty) பொறுத்தவரை இந்த வாய்ப்பு அதிகரிக்கிறது! பெட்டி (Sis. Betty) தேவனுடைய வார்த்தையை ஆழமாக கற்றறிந்த மாணவி; அவர்கள் தன்னுடைய ஆண்டவரை மிகவும் நேசித்து, அவரைப்பற்றி எழுதவும், மக்களுக்கு அவரைப்பற்றி சொல்லவும் ஆசைப்படுகிறவர். விளைவாக, தன்மீது உண்மையான மரியாதையுள்ள அநேகருடன் நெருங்கி பழகவும், அவர்களுடைய பிரச்சனைகளில் அவர்கட்கு உதவும் உறுதியும் கொண்டிருக்கிறார்.

இப்புத்தகம் அநேக நாட்கள் முயற்சியினால் வெளிவந்துள்ளது. தன்னுடைய மற்ற செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகளின் மத்தியில் பெட்டி (Sis. Betty) அவர்கள் இப்புத்தகத்திற்கென அநேக நேரம் செலவிட்டுள்ளார். முதலில் இது ஒரு பெண்கள் பாடப்புத்தகமாக தயார் செய்யப்பட்டது. ஆனால் அதையும் மீறி இது வளர்ந்துள்ளது. எனினும், இது பெண்களுக்கு மிகவும் உதவும் என நம்புகிறோம்.

இந்த முயற்சியின் மைய நோக்கம் ஆண்டவரை உயர்த்திப் பிடித்திருக்கின்றது; அதாவது கிறிஸ்தவராக மாறுவது என்றால் என்ன? மற்றும் கிறிஸ்துவுக்குள் வளருவது ஆகியவை பற்றியதாகும்.

மேலும் இந்த உலகில் சிறந்த முறையில் வாழ்வதற்கு கிறிஸ்தவத்தின் யதார்த்தமான செய்கைகள் மற்றும் பயிற்சிகளைப் பற்றியும்; மேலும் இப்படிப்பட்ட வாழ்வினால் வரும் மதிப்பு மற்றும் ஆசீர்வாதங்கள்; மேலும் ஒருவர் இந்த குடும்ப சாயலை அணிந்து கொள்ளாமல் எந்த உயர்ந்த நிலைக்கும் செல்ல முடியாது.

இந்த புத்தகத்தை நீங்கள் படித்து, உங்கள் வாழ்வில் பயிற்சி செய்வதினால், அது உங்களுக்கு ஆசீர்வாதமாக அமையும் என்ற உன்னத நோக்கத்துடன் இப்புத்தகத்தை நாங்கள் பிரசுரிக்கின்றோம். பெட்டியும் (Sis. Betty) நானும் இதைவிட வேறு என்னத்தை விரும்புவோம்.

**- ஜே.சி. சோட்**

(J.C. Choate)
Winona, MS - USA

## புத்தகத்தின் உள்ளே...

1. பிறப்பு

*(The Birth)* 01

2. அவருடைய சாயலில் மறுரூபமாவோம்

*(Transformed into His Image)* 15

3. பரிசுத்த விருந்தினர்கள்

*(The Holy Guests)* 24

4. தெய்வீக சுபாவத்திற்கு பங்காளிகள்

*(Partakers of Divine Nature)* 37

5. மாம்சத்தில் அவருடைய சாயலில்

*(In His Image, Physically)* 50

6. மனதளவில் அவருடைய சாயலில்

*(In His Image, Mentally)* 58

# கிருபையுள்ள வார்த்தையின்

## பிற வெளியீடுகள்

* **குடும்பம்**
  (குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் அருமையான ஆலோசனைகள்)

* **மனிதப் பிரச்சனைகளும், வேதாகம தீர்வுகளும்**
  (வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழு)

* **தேடுவோர்**
  (தபால்வழி திருமறைப் பாடம் - தமிழ்)

* **SEEKERS**
  (Bible Corres. Course - English)





# பிறப்பு

## (THE BIRTH)

### புறக்குறிப்பு – OUTLINE

**புறக்குறிப்பு:**

**அறிமுகம் :**

தேவஅன்பின் மையப் புள்ளியாக மனிதன் படைக்கப்பட்டான். இந்த உறவை 'பாவம்' உடைத்துப்போட்டது; ஆனால் தன்னுடைய குமாரன் மூலமாக மீண்டும் இணைப்பதற்கு தேவன் ஒரு திட்டத்தை உண்டாக்கினார்.

**I. பாவம் :**

அ. பிரிவினை (பிரிவு)

ஆ. மனிதனுடைய பரிதாபநிலை (உதவியற்ற நிலை)

**II. குடும்ப உறவு திட்டமிடப்பட்டது :**

அ. முதற்பிறந்தவர் (விளக்கம்)

ஆ. படைப்பில் முதற்பிறந்தவர்

இ. மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவர்

ஈ. சகோதரர்களில் முதற்பிறந்தவர்

**III. உண்மையில் வகுக்கப்பட்ட திட்டம் :**

அ. முற்பிதாக்களின் காலத்தை ஆய்வுசெய்தல்.

ஆ. மோசேயின் காலத்தை ஆய்வுசெய்தல்.

இ. முதற்பிறந்தவரின் வருகை.

1. முந்தைய கால வாக்குறுதியை மீட்டல்.
2. எதிர்கால வாக்குறுதியை மீட்டல்.

**IV. செயல்படுத்தும் சக்திகள் :**

அ. வார்த்தை

ஆ. தனிப்பட்ட ஆர்வம்

இ. குற்றத்தை உணருதல்.

**V. பிறப்பு :**

அ. பழைய மனிதனை களைதல்

ஆ. புதிய வாழ்வு

இ. நித்திய அர்ப்பணிப்பு

1. தேவனுடைய பகுதியில்

2. மனிதனுடைய பகுதியில்

**VI. குடும்பத்தில் சேர்க்கப்படுதல்**

அ. குடும்பப் பெயரை அணிதல்

ஆ. குடும்ப சாயலை தரித்துக் கொள்ளுதல்

இ. இருதயத்தில் இருந்து குடும்பத்தைப்பற்றிய நலன்.

ஈ. முதிர்ச்சியை நோக்கி குடும்பத்தில் வளருதல்.

**VII. குடும்ப சுதந்திரம் :**

அ. முதற்பிறந்தவருடன் (இயேசு) சுதந்திரம்

ஆ. அவரைப் போலவே இருப்போம்.

இ. முதற்பிறந்தவரின் அரியனை மகிமையை பகிர்ந்துகொள்வோம்.

**இறுதியாக :-**

மனித குடும்பத்தில் நெருங்கி பிணைக்கப்பட்ட அன்பின் உறவு விலையேறப் பட்டதாகும். தேவகுடும்பத்தில் உள்ள ஒற்றுமை மற்றும் அன்பானது மனித கட்டுகளை மிஞ்சிவிடும்.

# பிறப்பு

**பாடம் - LESSON**

**முகவுரை :**

தேவன் அன்பாக இருக்கிறார். (1யோ. 4:8). அன்பு வெளிக்காட்டப்படவும், நிறைவேற்றப்படவும், அதை பெறுகிறவர்களும், கொடுப்பவர்களும் தகுதியுள்ளவர் களாக இருக்க வேண்டும்.

இதுவே சிருஷ்டிப்பின் காரணமான இருந்தது. தேவனுடைய சிறந்த படைப்பும், அவருடைய அன்பின் பொருளுமாகிய மனிதனுக்காக மிக ஆச்சரியமான அன்பின் பரிசாக உலகத்தையும் அதில் உள்ள யாவும் ஆயத்தப்படுத்தப்பட்டது.

## I. பாவம் :

ஆனால் தேவனிடம் மனிதன் கொள்ளும் அன்பு உண்மையாக இருக்க வேண்டுமென்றால், அவனுக்கு தேர்வு செய்யும் உரிமை கொடுக்கப்பட வேண்டும். அதாவது தேவனிடத்தில் அன்புகூர்ந்து, அவருக்கு கீழ்ப்படிவதா அல்லது வேண்டாமா என்று தீர்மானிக்கும் திறன்.

சோதனை வந்தபோதோ, மனிதன் கீழ்ப்படியாமையை தேர்ந்தெடுத்தான் என்பது வருந்தத்தக்கது. (ஆதி.3:1-24) பாவமும் அதன் கொடுமையான விளைவு களும் உலகத்தில் நுழைந்தது. இயற்கையில் ஒழுங்கின்மையான யாவும், எல்லா தவறுகளும், மோசமானவைகளும், தேவனுக்கும் மனிதனுக்கும் எதிரானவைகள் யாவும், மனிதன் தேவனை விட்டு சாத்தானை தேர்ந்தெடுத்து பின்பற்றியதால் உண்டானது.

### அ. பிரிவு

பாவத்தின் மிக மிக கொடுமையான விளைவு என்னவென்றால் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே உண்டான பிரிவு. ஆபகூக் 1:13 கூறுகிறது "தீமையைப் பார்க்க மாட்டாத சுத்தக்கண்ணனே, அநியாயத்தை நோக்கிக் கொண்டிருக்க மாட்டீரே." ஏசாயா 59:1,2 "இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்கு கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை.

உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்கு செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" என்று கூறுகிறது.

**ஆ. மனிதனுடைய பரிதாப நிலை :**

மனிதன் தேவனுடைய சமூகத்தில் வரவேண்டுமென்றால் அவன் பாவம் நீக்கப்பட வேண்டும். மனிதன் தான் செய்த பாவங்களை நிவர்த்தி செய்யத்தக்கதாக முழுமையான விலையை கொடுத்தும் அவனிடத்தில் ஒன்றும் இல்லை. இப்படியாக மனிதன் தேவனிடத்தில் இருந்து பிரிக்கப்பட்டு, தன் பாவத்தில் நிலைத்திருந்தானாகில், அவனுக்கு ஒரே முடிவுதான் உண்டு; சரீரத்தில் மரணம் அதை தொடர்ந்து தேவனிடத்தில் இருந்து நித்தியமாக ஆவிக்குரிய பிரிவு. இந்த துயரத்தில் இருந்து விடுபட அவனுக்கு வேறு வழியில்லை.

## II. வடிவமைக்கப்பட்ட குடும்ப உறவு :

**அ. முதற்பேறானவர் :**

மனிதன் தனக்கென்று செய்ய முடியாதவைகளை தேவன் அவனுக்கு செய்ய வேண்டும் என்பதாக தேவஅன்பு இருந்தது. குறித்த காலத்தில் வார்த்தை (தேவத்துவத்தில் ஒருவர்) (யோ.1:1,2) உலகத்தில் தேவகுமாரனாகவும் (ஆவியில்) மனிதகுமாரனாகவும் (சரீரத்தில்) பிறப்பார். இரண்டு இயல்புகளையும் உடைய அவர் தேவனுக்கும், மனிதனுக்கும் இடையுள்ள பிரிவை தகர்ப்பார்.

**ஆ. சிருஷ்டிப்பில் முதற்பேறானவர் :**

தன் புத்திரத்துவத்தின் மூலம் எல்லா மனிதனும் தேவனுடைய புத்திரர் ஆகக் கூடிய கிருபையை கொடுத்த இயேசுவே தேவனுடைய முதற்பேறானவர்.

சரித்திரபிரகாரமாக, "முதற்பேறானது" என்பது மனிதனுடைய முதற்கனிகள், தனக்கு பிறந்த முதற்குழந்தை ஆகும். யாத்.13:1 மேலும் உபா. 21:15-17 கூறுகிறது முதல்பிறப்பு தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்றும், அவன் சில உரிமைகளுக்கு பாத்திரவான் என்றும் கூறுகிறது. தன் தந்தையின் மரணத்திற்கு பின்பு முதல் பிறப்பு தன் குடும்பத்தின் தலைவனாக மாறுகிறது. மேலும் சுதந்தரத்தில் இரு மடங்கு பங்கை பெற்றது. (உபா.21:12) பதிலாக, குடும்பத்தை கவனிக்க வேண்டிய பொறுப்பை ஏற்று, அவர்களுடைய தேவைகளை சந்தித்து வயது சென்ற பெற்றோர் களையும் கவனிக்க வேண்டியதாக இருந்தது.

முதற்பேறானது என்பது, தான் விரும்புகின்ற பிள்ளைக்கு கொடுக்கும் பட்டமல்ல. சட்டப்படி முதலாவது பிறந்த பிள்ளையையே அதுகுறிக்கும். இயேசுவை சிருஷ்டிப்பின் முதற்பேறானவர். (கொலோ.1:15) என்று குறிப்பிடும்போது, இயேசுவின் பிறப்பிற்கு முன்பு யாரும் தேவ்னுடைய குமாரனாக இருந்தது இல்லை. மரித்தோரிலிருந்து எழுந்த

முதற்பேறானவர்.

அதேவிதமாக, "மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறானவர்" (கொலோ.1:18) என்பது அவருக்கு முன்பு யாரும் மரணத்தை ஜெயம் கொள்ளவில்லை என்று வசனங்கள் கூறுகிறது. தேவபெலத்தினால் சிலர் மறுபடியும் ஜீவன் பெற்றனர். (2இரா.4:15-37 ; யோ.11:1-44). ஆனால் மறுபடியும் மரிக்கும்படியாக சரீரத்தில் வாழ்ந்தனர். மரணத்தை ஜெயங்கொண்ட முதன்மையானவர் கிறிஸ்துவே. (யோ.10:17,18) அவர் ஒருபோதும் மரிக்காதவராக எழுந்தார்.

தேவனை நேசித்து, பிள்ளைகளாக அவருடைய குடும்பத்தில் பிறந்த யாவரும் தங்கள் மூத்த சகோதரனான கிறிஸ்துவுடன் மரணத்தை ஜெயங்கொள்வார்கள் என்பதற்கு மரணத்தை மேற்கொண்ட இந்த ஜெயம் மனிதர்களுக்கு ஒரு உறுதியாகும். 1யோ.3:1,2 கூறுகிறது "நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள். பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். இனி எவ்விதமாய் இருப்போமென்று இன்னும் வெளிப்பட வில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து நித்திரை யடைந்தவர்களில் முதற் பலனானார்." (1கொரி.15:20)

**ஈ. அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவர் :**

"தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேரான்வராக இருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்." (ரோமர் 8:29)

இயேசுகிறிஸ்து உலகில் தேவகுமாரனாக பிறந்த பின்புதான் 'பிதா-குமாரன்' என்ற உறவு துவங்கியது. மனிதர்கள் அவருடைய சகோதரரானார்கள். இந்த உறவின் மூலம் அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்றனர். (கலா.4:6) ஆனால் கிறிஸ்துவே முதற்பேறானவர். அதற்குமுன்பு வேறுயாரும் தேவனுடைய குமாரனாக இருந்ததில்லை.

**III. உண்மையான திட்டம் :**

பிதாக்களின் காலத்தை தேவன் மனிதனோடு முயன்ற ஒரு வகையான உறவு என்றும், அது வெற்றிகரமான உறவு இல்லை என்றும் சிலர் தவறாக புரிந்து கொள்கின்றனர். தேவன் பின்பு, "மோசேயின்

சட்டத்தை" கொடுத்தார் என்றும்; அதுவும் பயனற்று போகவே கிறிஸ்துவை அனுப்பினார் என்றும் அவர்கள் நினைக்கின்றனர்கள்.

**அ. பிதாக்களின் காலத்தை குறித்த ஆராய்ச்சி :**

முயன்று பார்த்து தவறை விட்டு சரியானதை செய்வது (Trial and Error), இந்த முறையில் வேதத்தின் சரித்திரம் இருக்கிறது என்று நினைப்பது சாத்தியம் அல்ல. ஆதி முதல் எது தேவை என்று, மனிதனை இரட்சிக்க தான் என்ன செய்ய வேண்டும் என்பதையும் தேவன் அறிந்திருந்தார். வெளி. 13:8ல் "உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி" என்று கூறுகிறது. சிலுவையும் அதன் மூலமாக வரக்கூடிய இரட்சிப்பும்தான் தேவனுடைய குறிக்கோளாக இருந்தது. மற்ற எல்லா சட்டங்களும் ஒழுங்குகளும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்காக (இயேசு கிறிஸ்துவின் வருகை வரை) கொடுக்கப்பட்ட தற்காலிகமானது.

மனித சரீரத்தின் துவக்கத்தில், பிதாக்கள், அதாவது குடும்ப தலைவர்களை தேவன் நேரடியாக வழிநடத்தினார். ஆதாம், நோவா, ஆபிரகாமோடு தேவன் அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளையும், அறிவுரைகளையும் கொடுத்தார். இரட்சகர் பிறப்பார் என்ற வாக்குத்தத்தமும் அவர்களுக்குக் கொடுத்தார். (ஆதி.3:15 ; 18:18)

**மோசேயின் காலத்தை குறித்த ஆராய்ச்சி :**

இயேசுகிறிஸ்து பிறக்கும்படியாக ஆபிரகாமின் சந்ததியை தேவன் தெரிந்து கொண்டார். இந்த ஜனங்கள், இஸ்ரவேலர்கள், எகிப்தில் 400 ஆண்டுகள் வாழ்ந்த போது தேவனுடைய நாமத்தை கூட அவர்கள் மறந்து போனார்கள். எகிப்திலிருந்து அவர்கள் வெளியே வந்து ஒரு புது தேசமாக உருவாகும்போது, தேவன் அவர்களுக்கு சட்டங்களை கொடுத்தார். நல்லொழுக்க சட்டங்கள் நித்தியமான சரி, தவறுகளை சுட்டிக்காட்டுவதாகவும், பல சட்டங்கள் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாக தேசத்தை வழிநடத்துவதாகவும் இருந்தது. "அப்படியானால், நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாக கூட்டப்பட்டு...." (கலா.3:19)

**முதற்பேறானவரின் வருகை :**

சரீரத்தின் மையமாகிய முதற்பேறான இயேசுகிறிஸ்துவின் பிறப்பை முன் வைத்து, 2,000 ஆண்டுகள் பிதாக்களின் காலத்திலும், 1500 ஆண்டுகள் மோசேயின் காலத்திலும் தேவன் வழிநடத்தினார். இறுதியில், சரியான வேளையில் குமாரன் பிறந்தார்.

**1. பழைய (கடந்தகாலம்) அடமானத்தை மீட்பது :**

இயேசுகிறிஸ்துவின் மூலம் உண்டான புத்திரத்துவத்தினால், எல்லா காலத்திலும் வாழும் எல்லா மனிதர்களுக்கு குடும்ப உறவு திறக்கப் பட்டிருக்கிறது. எப்படியாக இந்த புத்திரத்துவம் பின்நோக்கி சென்று முன் உடன்படிக்கைக்கு மட்டுமே உடையவர்களான ஆபிரகாம், மோசே, தாவீது போன்றவர்களை குமாரர்களாக மாற்றியதோ அப்படியே கிறிஸ்துவின் இரத்தம் பின்நோக்கி சென்று, சிலுவைக்கு முன்பு கீழ்ப்படிதலுள்ளவர் களாக வாழ்ந்தவர்களை மீட்கின்றது.

**2. வருங்கால அடமானத்தை மீட்பது :**

எப்படி புத்திரத்துவம் முன்நோக்கி சென்று உலகத்தின் முடிவுவரை கீழ்ப்படிகின்றவர்களை தேவனுடைய குமாரனாக மாற்றுகின்றதோ, அப்படியே கிறிஸ்துவின் இரத்தம் முன்நோக்கிச் சென்று அவர்களை சுத்திகரிக்கிறது. "நாம் புத்திரசுவீகாரத்தையடையும்படி, நியாயப் பிரமாணத்திற்காக கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத்தக்கதாக காலம் நிறைவேறினபோது .......தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்."

## IV. செயல்படுத்தும் சக்தி :

இயேசுகிறிஸ்துவின் வருகை மற்றும் அவர் சிலுவையில் பலியானதின் மூலம் மனிதனுக்கான மீட்பின் வழி நிறைவு பெற்றது.

தேவனிடத்திலிருந்து பாவத்தினால் பிரிந்திருக்கும் மனிதன் இதை தெரிந்து கொள்ளும்வரை இதனால் எந்த பயனும் இல்லை. ஆகையால், இந்த செய்தி பரவும்படியாக தேவன் ஒரு வழியை ஏற்படுத்தினார்.

**அ. வார்த்தை :**

இயேசுகிறிஸ்து தன் சீஷர்களை நோக்கி "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15) முதலாம் நூற்றாண்டு துவக்கி, தங்களை சுற்றியுள்ளவர்களுக்கு இந்த நற்செய்தியை பிரசங்கிப்பது ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வேலையில் ஒரு பகுதியாக இருந்தது.

எல்லா காலங்களிலும் வாழும் எல்லா மனிதர்களுக்காகவும், சுவிசேஷம், பிழையின்றி பாதுகாக்கப்படும்படியாக, பரிசுத்த ஆவியான வரின் வழிநடத்துதலினால் புதிய ஏற்பாடு சுவிசேஷத்தின் எழுத்து வடிவம் எழுதப்பட்டது. "வேதவாக்கியங் களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்

தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது." (2தீமோ.3:16,17)

**ஆ. தனிப்பட்ட விருப்பம் :**

தேவனுடைய வார்த்தை இருதயத்திற்குள்ளாக ஊடுருவவும் வேண்டு மென்றால் தேவனையும், சத்தியத்தையும் அறிய வேண்டும் என்ற தனிப்பட்ட ஆசை வேண்டும்.

மற்றவர்களுக்கு கற்றுத்தர முயன்றவர்கள் இந்த உண்மையை அறிவார்கள்; கற்றுக்கொடுப்பவர் எவ்வளவுதான் தன் மாணவனை நேசித்தாலும் மாணவன் இத்தனை விலையுயர்ந்த சத்தியத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்ற உயர்ந்த விருப்பம் கற்றுக்கொடுப்பவருக்கு இருந்தாலும், விதையானது முளைத்து வளராது. 2தெச.2:10-12. "கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே.... இரட்சிக்கப்படத்தக்கதாக, சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும்.

திறக்கப்பட்டிருக்கும் இருதயங்களில், பரிசுத்த ஆவியானவர் தன் ஜீவசெய்தியின் மூலம் பாவத்தைக்குறித்த உணர்வை ஏற்படுத்துகிறார். "அவர் வந்து பாவத்தைக்குறித்தும் நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்திற்கு கண்டித்து உணர்த்துவார்." (யோ.16:8)

**V. பிறப்பு :**

ஒரு நேர்மையான இதயமானது, பாவத்தின் கொடுமையைப் பற்றியும், இயேசுவின் மூலமாக உள்ள இரட்சிப்பைப் பற்றியும் கேள்விப்பட்டவுடனே மனப்பூர்வமாய் வேத வசனங்களின் வழிகாட்டுதலுக்கு தன்னைக் கீழ்ப்படுத்துகிறது. "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு சொன்னார்.

**அ. பழைய மனிதனை களைந்து போடுதல்:**

ஒரு பாவி, தேவனுக்கு முன், ஆவிக்குரிய வகையில் மரித்தவனாயிருக்கிறான். அவன் மறுபடியும் வாழ வேண்டுமெனில், "ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறக்க வேண்டும்" (யோ. 3:5). "நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு பாவசரீரம் ஒழிந்து போகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேக் கூட சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.... அப்படியே நீங்களும் உங்களை பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்

கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள். ஆகையால் நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத் தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக" (ரோ. 6:6,11,12)

**ஆ. புதுவாழ்வு :**

ஒரு பாவி, சுவிசேஷத்தைக் கேட்டு அதை விசுவாசிக்கும்போது, அவன் பாவி என்றும், தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டுள்ளான் என்றும், இயேசு கிறிஸ்துவின் மூலமாய் அவன் பாவங்கள் மன்னிக்கப்பட முடியும் என்று உண்மையை உணர்கிறான். ஆகவே, அவன் தன்னுடைய பழைய பாவ வாழ்வை விட்டு, இயேசுவை பின்பற்ற தீர்மானிக்கிறான். அவன் இயேசுவின் மேல் தன்னுடைய விசுவாசத்தை, அவர் தேவகுமாரன் என அறிக்கை செய்கிறான். பின்பு அவன் தண்ணீரில் பாவ மன்னிப்புக்கென்று (ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறந்து) திருமுழுக்குப் பெறுகிறான்.

"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கி றீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்" என்று ரோமர் 6:3,4 வசனங்கள் கூறுகின்றன.

**நித்தியமான அற்பணிப்பு :**

ஒரு ஏலம் நடைபெறும் இடத்தில் இருக்கும் அடிமை உதவியற்ற நிலையில் இருப்பான. அதே போல் பாவம் செய்த மனிதன், பாவத்திற்கு அடிமை என்று சொல்லப் படுகிறான். மேலும், எப்படி ஒரு அடிமை, தான் விடுதலையாக வேண்டும் என விரும்புவானோ, அதேப்போல் ஒரு பாவியும் மீட்கப்பட (அல்லது) விலைக்கு வாங்கப்பட (அல்லது) விடுவிக்கப்பட வேண்டும்.

இரக்கத்தில் ஐசுவரியமுள்ள மனிதன் அந்த அடிமையை விலைக்கு வாங்கி விடுவிக்கலாம். அவர் அந்த அடிமையினுடைய எஜமானிடத்தில் அவனுக்கான தொகையை செலுத்துவார்.

கிறிஸ்து பாவத்திலிருந்து விடுதலையாக விரும்பும் எல்லா மனிதர்களுக்காகவும், அந்த விலையை செலுத்தினார். இதற்காக அவருக்கு செலவான தொகை "அவருடைய வாழ்வு".

**I. தேவனுடைய பங்கு (God's Part)**

மனிதன் தேவனுடைய பிள்ளையாக எண்ணப்படும்படியாக, வார்த்தையானது இந்த உலகில் தேவக்குமாரனாகவும், மனுஷ குமாரனாகவும் பிறந்தார். அவருடைய மாம்ச சரீரத்தில், மனிதர்க்கு சகோதரராக, அவர் எல்லா மனிதர்களின் பாவங்களுக்காக மரித்தார். “நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்” (2கொரி. 5:21)

ஆதிமுதல் வார்த்தையானது தேவத்துவத்தின் மகிமையை பகிர்ந்தளித்து வந்தது. ஆனால் அவர் மனிதகுலத்தில் ஒருவராக சேர்ந்தபொழுது, “அவர் தம்மைத் தாமே வெறுமையாக்கினார்” “அவர் தம்மை உயர்த்தாமல், அடிமையின் ரூபமெடுத்து, மனுஷ சாயலானார்” (பிலி. 2:7) இயேசு தம்மை “வெறுமையாக்கியது, மனுஷ சாயலானது, தன்னைத்தானே தாழ்த்தினதுதான் மனித இரட்சிப்பிற்கு வழிகாட்டியது.” (பிலி. 2:8)

பாவத்திற்கு கடைசி தீர்வு மரணம். மேலும் சட்டதிட்டத்தின்படி ஒவ்வொரு மனிதனும் சரீரத்திலும், ஆவியிலும் மரிக்க வேண்டும். ஆனால், இயேசு ஒருபோதும் பாவம் செய்யாதவராயிருந்தும் மனிதர்கள் ஆவியிலே வாழும்படியாக, மனிதனாக மாம்சத்திலே மரித்தார்.

இப்பொழுது, நித்தியமாக தேவகுமாரன் (அல்லது) மனிதகுமாரன் (அல்லது) உயிர்த்தெழுந்து வெற்றி சிறந்த இரட்சகராகிய இயேசு கிறிஸ்து, தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒரு சமாதானக் காரணராக நிற்கிறார். மனிதனுக்கு சகோதரனாக, அவர் பரமேறிச்சென்று தேவசமூகத்திற்கு சென்றுள்ளார். மேலும் அவர் கீழ்ப்படிதல் உள்ளவர்களின் பாவங்களைத் தன்னுடைய இரத்தத்தின் சிவப்பு நிறத்தால் மூடிக்கொண்டு நமக்காக தேவனிடம் பேசிவருகிறார். “தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே” என்று 1தீமோ. 2:5 கூறுகின்றது.

**II. மனிதனுடைய பங்கு (Man's Part)**

எப்படி கிறிஸ்துவினுடைய மரணம், மனிதனுக்காக அவருடைய நித்திய அற்பணிப்போ, அதேப்போல் பாவத்தில் அடிமையாயிருந்த வர்களை மீட்கும்படியான அவருடைய “விலை” மற்றும் “தண்ணீர் மற்றும் ஆவியினால் தேவனுடைய குடும்பத்தில் நாம் பிறந்தது ஆகியவையும் அவருடைய நித்திய அற்பணிப்புள்ள தீர்மானம்.

அந்த குடும்பத்தில் நான் பிறந்ததினால், நாமும் கிறிஸ்துவின்

சகோதரர்களானோம் (எபி. 2:17). மேலும் தேவனுக்கு பிள்ளைகளானோம். நாம் புத்திர சுவீகாரத்தையடையும்படி தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார். மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத் தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். "ஆகையால் இனி நீ அடிமையாயிராமல், புத்திரனாயிருக்கிறாய், நீ புத்திரனேயானால் கிறிஸ்து மூலமாய் தேவனுடைய சுதந்தரனுமாயிருக்கிறாய்" (கலா. 4:4-7)

நாம் ஒருமுறை இந்த குடும்பத்தில் பிறந்ததினால், நாம் எப்போதும் இக்குடும்பத்தின் அங்கத்தினர்களாயிருப்போம். நாம், ஒரு விசுவாசமுள்ள கீழ்ப்படிதலான பிள்ளையாக வளர்ந்து நம்முடைய தந்தைக்கு சந்தோஷமும், கனமும் கொண்டு வரலாம். (அல்லது) கீழ்ப்படிதல் இல்லாமல் அவரைவிட்டு விலகிச் செல்லலாம். நாம் மகிமையிலே ஒருநாள் அவருடைய வீட்டிற்குள் வரவேற்கப்படலாம். (அல்லது) நாம் தண்டிக்கப்படலாம். ஆனால் இரண்டு நிலையிலும் நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம்.

## VI. குடும்பத்தில் சேர்க்கப்படுதல் : (Added to the Family)

இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் திருச்சபையிலே (இதுதான் தேவனுடைய குடும்பம்) சேர்த்துக் கொண்டு வந்தார்" என்று அப்.2:47 கூறுகின்றது.

**(அ) குடும்ப பெயரை அணிந்து கொள்ளுதல் :**

குடும்ப அங்கத்தினர்கள் குடும்ப பெயரை அணிந்து கொண்டு, அந்த தருணம் கிடைத்ததினால் மகிமையடைந்தனர். "நாம் இரட்சிக்கப் படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப். 4:12) "வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து...." (கொலோ. 3:17)

**(ஆ) குடும்ப சாயலை தரித்துக் கொள்ளுதல் :**

கிறிஸ்துவின் ஆவி நம்மிலே தங்கியிருந்து வெளிப்படுவதினாலே, நாம் குடும்ப சாயலை தரித்துள்ளோம்.... தேவன், இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும்பொருட்டு, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார் என்று 2கொரி. 4 கூறுகின்றது. நம் மூலமாக தேவனுடைய ஒளி பிரகாசிப்பதினால், மற்றவர்களுக்கு கிறிஸ்துவின் அறிவு (சித்தம்) கொண்டு செல்லப் படுகின்றது.

**(இ) இருதயத்தில் குடும்ப நலனை உடையதாயிருத்தல்:**

உலகத்தில் இருக்கும் குடும்பங்களைப் போன்றே நாம் தேவனுடைய பிள்ளைகளான பின், நம்முடைய தேவகுடும்பத்தைப் பற்றி அக்கறை வேண்டும். 2கொரி. 11:26-28 வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் தான் சரீரத்தில் அனுபவித்த கொடுமைகளையும், தனக்கு நேரிட்ட ஆபத்துக்களையும் சொல்லி முடிக்கும்போது, "இவை முதலானவை களையல்லாமல், எல்லாச் சபைகளைக் குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது". பவுல், ஐரோப்பிய மற்றும் ஆசியா நாடுகளில் இருந்த ஆண்டவருடைய குடும்பங்களுடன் (திருச்சபை) ஊழியம் செய்தபொழுது அவர் இருதயத்தில் அவர்களுடைய நலனே மிகவும் பாரமாக இருந்தது. நம்முடைய எண்ணமும் இப்படியே இருக்க வேண்டும்.

**(ஈ) குடும்பத்தில் முதிர்ச்சியை நோக்கி வளருதல் :**

சரீரத்தில் பிள்ளைகள் வளர்ந்து, தங்கள் பெற்றோரின் சாயலை உடையவர்களாய், பொறுப்புள்ள வாலிபர்களாய் வளர்கின்றனர். அதேப்போல் கிறிஸ்தவர்களும்.... "தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கிறபடியால்..." (எபே. 4:15)

## VII. குடும்ப சுதந்திரம் (Family Inheritance)

இறுதியில், கீழ்ப்படிதல் உள்ள பிள்ளைகட்கு வாக்குத்தத்தமாக கொடுக்கப் பட்ட பரிசு, நித்தியவாழ்வு. "....... நீ மரணபரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" (வெளி. 2:10) இந்த வாழ்வு முழுவதும் நாம் சரீர மற்றும் ஆவிக்குரிய ஆரம்பமே. நாம் எதிர்பார்க்கும் சொல்லமுடியாத வாழ்வின் சந்தோஷம், நித்தியமாய் தேவசமூகத்தில்தான் உண்டு.

**(அ) முதற்பிறந்தவருடன்**

நம்முடைய மூத்த சகோதரனாகிய இயேசு ".....அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில்.... பரிசுத்தஞ் செய்கிறவரும் பரிசுத்தஞ் செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள். இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்" என்று கூறப்படுகிறது. (எபி. 2:10,11) "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்... தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே" (ரோமர் 8:16-17)

**(ஆ) நாம் அவரைப் போல இருக்கனும்**

"....நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை. நாமெல்லாரும் மறுரூபமாக்கப் படுவோம்.... அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவான இது சாவாமையையும் தரித்துக் கொள்ளும்..." (1கொரி. 15:51-53) "மேலும், மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்து கொள்ளுவோம்" (1கொரி. 15:49)

**(இ) முதற்பிறந்தவரின் சிங்காசத்தின் மகிமையை பகிர்ந்து கொள்ளுவோம்**

இயேசு மரிப்பதற்கு முன் செய்த ஜெபம் இதுதான். "நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்... பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ, அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன்" (யோ. 17:22-24) "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ, அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோட கூட உட்காரும்படி அருள்செய்வேன்" (வெளி. 3:21)

**முடிவுரை :**

ஜீவனுக்கு செல்லும் வழி (ஒருமை) மிகவும் குறுகியது மற்றும் கடினமானது என்றும், அதை கண்டுபிடிப்பவர்களே சிலர்தான் என்றும் மத். 7:14ல் இயேசு எச்சரிக்கின்றார். நாமும் இந்த உண்மையை அறிந்து, அவருடைய குடும்பத்தில் பிறந்து விட்டோம் என்றால், 'இந்த பூமியில் மனிதர்களாக' நாம் எவ்வளவு பாக்கியம் பெற்றவர்கள்! இந்தக் குடும்பத்தின் பெயரையும் மதிப்பையும் நாம் எவ்வளவு கவனமாக பாதுகாத்துக் கொண்டு, இந்தக் குடும்பத்தின் அங்கமாக நாம் அவருக்கு மகிமையை மாத்திரமே கொண்டு வர வேண்டும். மேலும், காலம் நிறைவேறும்பொழுது நாம் அவர் வருகையின்போது மகிழலாம். அப்போது "....கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதுமே கர்த்தருடன் கூட இருப்போம்"

(1தெச. 4:16-17)

## *கேள்விகள்*

1. மனிதன் ஏன் படைக்கப்பட்டான்?
2. "முதற்பிறந்தவர்" என்று கிறிஸ்துவைக்குறிக்கும் குறிப்புகளின் முக்கியத்துவத்தை விளக்குக.
3. இயேசு மட்டுமே தேவனுடைய மிக முக்கியமான குமாரன் என்று இந்த வாக்கியங்கள் குறிக்கின்றதா?
4. மோசேயின் பிரமாணம் சரியாக செயல்படவில்லை என காலம் நிரூபித்ததால், மோசேயின் பிரமாணத்திற்கு பதில் கிறிஸ்துவின் பிரமாணம் மாற்றப்பட்டதா?
5. மனிதனுக்கு இரட்சிப்பு எப்படி கொடுக்கப்பட்டது?
6. தேவனுடைய வார்த்தையானது துளிர்விட்டு கனி கொடுக்க வேண்டுமானால், கேட்பவரின் இருதயத்தில் என்ன இருக்க வேண்டும்?
7. "புதிய பிறப்பை" விளக்குக.
8. பாவத்திற்கு ஈடாக கிறிஸ்து என்ன "விலைக்கிரயம்" கொடுத்தார்?
9. நம்முடைய இரட்சிப்பின், தேவனுடனான நித்திய அற்பணிப்பின் மையப்பகுதியான "புதிய பிறப்பு" என்றால் என்ன?
10. தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினர் என்றமுறையில், நமக்குள்ள ஸ்லாக்கியங்கள் மற்றும் பொறுப்புகள் யாவை?
11. நமக்கு வாக்குக்கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை விளக்குக.
12. தேவனுக்கு எத்தனை குடும்பங்கள் உண்டு?



# அவருடைய சாயலில் மறுரூபமாவோம்

## *(TRANSFORMED INTO HIS IMAGE)*

### புறக்குறிப்பு – OUTLINE

**புறக்குறிப்பு – அறிமுகம்:**

தேவன் தன்னை பிரஸ்தாபப்படுத்தும்படியாக இந்த உலகில் நம்மை வைத்துள்ளார். ஆனால் அவர் நம்மை எந்தவித துணையுமில்லாமல் விடவில்லை. நம்முடைய பயணம் ஆவிக்குரிய பாதுகாப்பாக இருக்கும்படியாக, அவர் நமக்கு பாதுகாப்பு சட்டங்களை கொடுத்துள்ளார்.

**I. அனுபவமற்ற புறதேசத்து குடிகள் :**

அ. மாம்சபிரகாரமாக, ஒரு அந்நிய சேத்தில்

ஆ. ஆவிக்குரிய பிரகாரம், உலகத்தில்

இ. சட்டங்களுக்காக காரணங்கள்

1. அனுமதிக்கப்பட்ட எல்லாம் நல்லது.
2. தடைசெய்யப்பட்ட எல்லாம் கெட்டது.

**II. புது பிறப்பிற்கு பின் உருமாறுதல் :**

அ. சட்டங்களினால் கொடுக்கப்பட்ட நெறிமுறைகள்

ஆ. உதாரணங்களினால் கொடுக்கப்பட்ட நெறிமுறைகள்

**III. நாம் புது சிருஷ்டிகள் :**

அ. தேவனிடத்திலிருந்து மரித்த நாம், புதிதாக சிருஷ்டிக்கப்பட்டோம்

ஆ. 2கொரி. 5:15,17

இ. கொலோ. 3:3

ஈ. கலா. 2:20

உ. ரோ. 8:9

**IV. நம்முடைய மனது புது உருப்பெற்றது :**

அ. பிலி. 2:5

ஆ. ரோ. 8:6

**V. நாம் மாதிரியை பிரதிபலிப்பவர்கள் :**

அ. 1கொரி. 11:1

ஆ. பயிற்சியினால் அந்த மாதிரியே நம்முடைய சொந்த முகச் சாயலாக மாறி விடுகிறது.

**VI. கிறிஸ்து நமக்குள் உருவானார்**

**VII. நாம் அவருடைய சாயலில் மாறியுள்ளோம்**

**VIII. நாம் கிறிஸ்துவை பெரிதாகக் காட்டுபவர்கள்**

**முடிவுரை :**

உலகில் இந்த கால நேரம் தான், நம்மை நாமே குடும்ப சாயலுக்கு உருமாற்றக்கூடிய தருணம். உலகில் உள்ள எல்லா மக்களையும்வட தேவனுடைய பாதுகாப்பான அக்கரையும் வழிநடத்துதலும் நமக்கு இருப்பதினால் நாம் நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

# அவருடைய சாயலில் மறுரூபமாவோம்

**பாடம் - LESSON**

**அறிமுகம் :**

புதிய ஏற்பாட்டில் "செய்ய" அல்லது "செய்யக் கூடாது" என்று சொல்லப் பட்டவைகளை, மனிதர்கள், ஐயோ! என்னால் இவ்வளவு நல்லவனாக இருக்க முடியாது. அல்லது "முதலில் இதில் கொஞ்சம் மட்டும் முயற்சி செய்கிறேன். பின்பு நான் வயதான பின் கிறிஸ்தவத்தின் வரையறைகட்கு என்னை நான் தகுதிப் படுத்துவேன்" என்ற எண்ணத்துடனேயே படிக்கிறோம்.

பரிதாபத்துக்குரிய காரியம் என்னவென்றால், அவர்கள் சட்டங்களையும், வரையறைகளையும் தவறாக புரிந்து கொண்டுள்ளனர். நாம் இடறிவிழும்படியாக அல்லது நாம் கீழ்ப்படிகிறோமா, இல்லையா என்று சோதிக்கும்படியாக தேவன் தனது சட்டங்களை கொடுக்காமல், மாறாக, நம்முடைய வாழ்வில் நன்மையானவற்றைக் கூட்டவும், தீமையானவற்றை அகற்றவும் அவை கொடுக்கப்பட்டுள்ளன. "மனிதனுக்கு நன்மையான எல்லா குறிப்புகளும் சேர்க்கப்பட்டு, நன்மையில் ஒன்றுமே விடப்படவில்லை. மேலும், கெட்ட காரியம் ஒன்றுமே இதில் சேர்க்கப்படவில்லை. இந்த உலகில் வாழ்வதற்கான முழுமையான வழிகாட்டி" என்று கிறிஸ்தவ நெறிமுறையைத்தான் இவ்வுலகில் கூற முடியும்.

## I. அனுபவமற்ற புறதேசத்து குடிகள் :

**(அ) மாம்சபிரகாரமாக, ஒரு அந்நிய தேசத்தில் :**

எங்களுடைய குடும்பம் முதல்முறையாக வேற்றுநாட்டில் வாழ நேரிட்டபோது, சரீர சுகவீனத்தின்போதும் வன்முறை நேரங்களிலும் மேற்கொள்ள வேண்டிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகளைப் பற்றியும் அமெரிக்க தூதரகத்தினால் ஒரு பட்டியல் கொடுக்கப் பட்டது. நாங்கள் அனுபவமற்ற புறதேசத்திற்கு குடிசென்றதால் நாங்கள் தினந்தோறும் எப்படி பாதுகாப்பாகவும் சுத்தோடும் இருக்க வேண்டும் என்று அதிகாரிகள் அறிந்திருந்தனர்.

**(ஆ) ஆவிக்குரிய வகையில், இவ்வுலகத்தில் :**

இப்படிப்பட்ட ஒருநிலையில்தான் கிறிஸ்தவர்கள் உள்ளனர். தேவகுடும்பத்தில் நாம் பிறந்த நாள் முதல் நம்முடைய குடியுரிமை

பரலோகத்துவாசியாகி விட்டது. மேலும் நாம் உண்மையில் தேவ சன்னிதியில், எல்லா நீதிமான்களுடன் துணையாக பரலோகத்துக்கு சொந்தமானவர்கள். தடையும், குழப்பங்களும் கொண்ட ஒரு உலகத்துக்கு சொந்தமானவர்கள் நாம் அல்ல.

**(இ) சட்டங்களுக்கான காரணங்கள் :**

நாம் செய்ய வேண்டிய ஒரு கடமை நமக்கு உண்டு. இயேசுவினுடைய விலையேறப்பெற்ற தியாகம் மனுக்குலத்திற்கு யாதொரு நன்மை கொண்டுவர வேண்டுமெனில், உலகத்திற்கு இயேசு கிறிஸ்துவைப்பற்றி சொல்ல வேண்டியது அவசியம். ஆகையால், நாம் பரலோகத்து குடிமக்களாய் இருந்தாலும், சிறிது காலம் மட்டும் இந்த அந்நிய தேசத்தில் தேவனுடைய தூதுவர்களாக (பிரதிநிதியாக) இருக்கிறோம். அனுபவமற்ற புறதேசவாசிகளாய் நாம் இருப்பதினால், இவ்வுலகத்தின் மிக சிறிதளவு ஆபத்துக்களுடன் நாம் வாழ்நாளை கழிக்கும்படி எல்லாம் அறிந்த தேவனிடமிருந்து நமக்கு, சுக மற்றும் பாதுகாப்பு சட்டங்கள் தேவை.

**1. அனுமதிக்கப்பட்ட எல்லாம் நல்லது :**

தேவனுடைய எந்த ஒரு கட்டளையும், சும்மா ஏதோ ஒன்றை மனிதன் வருந்தி செய்யும்படியாக வார்த்தைகளாக போடப்படவில்லை. மாறாக, நமக்கு வாழ்வில் நலன் பயக்கவும், நம்மைச் சுற்றி இருப்போரின் நன்மைக்காகவும் மாத்திரமே ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டு கற்பனைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**2. தடைசெய்யப்பட்ட அனைத்தும் தீயவை :**

அதேப்போல், நமக்கு தீமை விளைவிக்காததினால் தவிர, எந்த ஒரு காரியமும் மறுக்கவோ, தடைசெய்யப்படவோ இல்லை. தேவன் தன்னுடைய பிள்ளைகள் சந்தோஷமாக இருக்க வேண்டுமென விரும்புகிறார். அதே நேரத்தில், இந்த உலகில் உள்ள எந்த ஒரு பாவம் நிறைந்த "விளையாட்டு" காரியமும் சந்தோஷம் கொடுப்பது போல் தோற்றம் மாத்திரமே கொடுக்கிறது. ஆரம்பத்தில் பாவம் இனிமையானதாக தோன்றினாலும், இறுதியில் அது அழிவைக் கொண்டுவரும். இந்த சுய அழிவில் நாம் சிக்கிக் கொண்டு அழிவதற்கு முன் நம்மைப் பாதுகாக்கும்படி 'செய்யாதே' என்று சொல்லி பாதுகாக்கின்றார்.

## II. பிறப்பிற்கு பின் உருமாறுதல் :

பொதுவாக, ஒருவர் தேவனுடைய குடும்பத்தில் திருமுழுக்குப் பெற்று, புதிதாக பிறந்த கிறிஸ்தவராய் மாறும்பொழுது, ஏற்கனவே இந்த உலகத்தின் சாயலில் உருவாக்கப்பட்ட அவருடைய யோசனைகளும்

பழக்கவழக்கங்களும் இப்பொழுது அவருடைய பேச்சும், சிந்தனைகளும், செயல்களும் உருமாறுகின்றன.

**(அ) சட்டங்களினால் கிடைத்த நெறிமுறைகள் :**

ஒரு காரியத்தை செய்து முடிப்பதற்கு, குறிப்பிட்ட மற்றும் ஈடுபாடுள்ள வழிமுறைகள் அவசியம். ஒரு கிறிஸ்தவனுக்கு இந்த சட்டங்கள், மோசேயினால் கொடுக்கப்பட்ட சட்டங்களை விட இன்னும் ஆழமான விவரமாக கொடுக்கப் பட்டுள்ளன.

**(ஆ) முன்மாதிரிகளால் கொடுக்கப்பட்ட நெறிமுறைகள் :**

கற்றுக்கொள்வதற்கான எளிமையான முறை, ஒரு விவரமான மாதிரியை உருவாக்குவதுதான். தேவன், கிறிஸ்துவை நமக்கு மாதிரியாக கொடுத்ததின் மூலம் இந்த எளிமையான வழியை நமக்காக தெரிந்தெடுத்தார்.

## III. நாம் புது சிருஷ்டிகள் :

ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய பழைய வாழ்விற்கு மரித்து, கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக உருவாக்கப்பட்டுள்ளான். "மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்." (எபே. 4:24)

**(அ) தேவனிடத்திலிருந்து மரித்திருந்த நாம், புதிதாக சிருஷ்டிக்கப்பட்டோம்**

நாம் பாவம் செய்தபொழுது, ஆவிக்குரிய வகையில் தேவனிடத்திலிருந்து மரித்தோம். ஆனால், எப்படி ஒரு குழந்தை மாம்சத்திலே புதுவாழ்வு எடுக்கிறதோ, அதேப்போல் நாமும் தேவனுடைய குடும்பத்தில் பிறக்கின்றபொழுது, ஒரு புதிய ஆவிக்குரிய மனிதன் சிருஷ்டிக்கப்படுகிறான். (இதே வாக்கியம்தான், தேவன் ஆதியாகமம படைப்பிலே ஒன்றும் இல்லாததில் இருந்து படைத்ததை விவரிக்கின்றது). இயல்பான நிலையில் நாம் ஆவிக்குரிய வாழ்வில் மங்கிப் போனோம். ஆனால், நமக்குள் இருக்கும் ஆவியின் துரிதப்படுத்தும் வல்லமையினால், நாம் நீதியும் பரிசுத்தமும் உடைய புது சிருஷ்டியாக தேவனுக்கு முன் இருக்கிறோம்.

**(ஆ) 2 கொரி. 5:15-17**

"பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்.

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின".

**(இ) கொலோ. 3:3**

"ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது".

**(ஈ) கலா. 2:20**

ஒரு கிறிஸ்தவனுக்கோ, "...... இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிருக்கிறார்" நாம் பாவத்திற்கும், இந்த உலகத்தினுடைய ஆசை இச்சைகளுக்கும் மரித்தவர்களானதால், கிறிஸ்துவினுடைய ஆவியே நம்முடைய வாழ்விற்கு குறிக்கோளையும், திசையையும் கொடுக்கிறது.

**(உ) ரோமர் 8:9**

தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல், ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள்."

ஆகையால், நாம் வெளிப்புறமாக மற்ற மனிதர்களைப் போல மாம்சத்தில் வாழ்கிறோம். ஆனால் நாம் உண்மையில் ஆவியில் வாழ்கின்றோம். மேலும் தேவனுடைய, இயேசுவினுடைய ஆவி நமக்குள் வாசமாயிருக்கிறார்கள்.

## IV. புது உருவற்ற நம்முடைய மனம் :

**அ. பிலிப்பியர் 2:5**

நம்முடைய வாழ்வை மாற்றும்படியாக கிறிஸ்துவை முன் உதாரணமாக நாம் பின்பற்றும்படி கொடுத்துள்ளதின் மூலம், "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது " (பிலி.2:5) என்று தேவன் நமக்கு அறிவுறுத்த முடிகிறது.

**ஆ. ரோமர் 8:6**

"மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்." ஒரு முழு சந்தோஷமான வாழ்வு உங்களுக்குத் தேவையா? நமக்கு சமாதானம் தேவையா? அவசியம் தேவை. இதுதான் ஒவ்வொரு ஆத்துமாவின் ஏக்கம். நம்முடைய மனதை ஆவிக்குரிய வழிகாட்டுதலின்படி கிறிஸ்துவின் மனதாக மாற்றுவதே சமாதானம் மற்றும் வாழ்வை அடைவதற்கான வழி என்று தேவன் கூறுகிறார்.

## V. நாம் மாதிரியை பிரதிபலிப்பவர்கள் (பின்பற்றுபவர்) :

**அ. 1கொரி. 11:1**

"நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்." பிரதிபலிப்பது என்றால் பின்பற்றுவது என்று அர்த்தம். இந்த இடத்தில் இது, அதை நம்முடைய பழக்கமாக்கிக்

கொள்ள பயிற்சி செய்வதாகும்.

**ஆ. பயிற்சி :**

பயிற்சி என்பது ஒரு மேம்போக்கான செயல் என்றும் அர்த்தமாகலாம்; ஆனால் பவுல் மாய்மாலத்தை உற்சாகப்படுத்தவில்லை. மாறாக, பின்பற்றுவதினால் கற்றுக்கொள்ளும் ஒரு முறையை அவர் விளக்கினார் என்று நான் நினைக்கிறேன். ஆனால் ஒருவர் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளும்போது, அந்த வாழ்வே அவருடைய சொந்த இயல்பு மற்றும் எண்ணமாகிறது; ஏனென்றால் அவர் கொஞ்சம் கொஞ்சமாக கிறிஸ்துவைப்போல மாற ஆரம்பித்துவிட்டார்.

## VI. கிறிஸ்து நமக்குள் உருவாகுதல் :

கலாத்தியாவில் உள்ள கிறிஸ்தவர்களிடம், பவுல் கூறும்பொழுது, "என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்." (கலாத்தியர் 4:19) என்கிறார். ஒரு கிறிஸ்தவருடைய வாழ்விலே ஏற்பட வேண்டிய வளர்ச்சி மற்றும் மாற்றத்தை ஒரு வரைபடம் போல் விளக்கக்கூடிய, என்ன ஒரு அருமையான பகுதி இது!

## VII. நாம் அவருடைய சாயலில் மாறியுள்ளோம் :

"நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிறது கர்த்தரால் அந்தச் சாயலாகத் தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்." (2கொரி.3:18)

கண்ணாடி போல தேவனுடைய வார்த்தையில் கிறிஸ்து கூறியவற்றை நாம் படிக்கும்போது, அதில் அவருடைய எண்ணங்கள், அவருடைய வார்த்தைகள், அவருடைய செயல்கள், அவருடைய மனோபாவம், அவருடைய அன்பு, மேலும் அந்த அறிவை நாம் கற்றுக்கொள்ளும்போது, கொஞ்சம் கொஞ்சமாக நாம் மறுபடி உருவாகி, அவருடைய சாயலுக்கு ஒப்பாக மாறுகிறோம். அவர் நினைப்பதைப் போல நாம் நினைக்க ஆரம்பித்து, அவருடைய ஸ்தானத்திற்கு ஒப்ப காரியங்களை மதிப்பிடுகிறோம். இந்த உலகிற்கான அவருடைய அன்பையும், இரட்சிக்கப்படாதவர் கள் மீதான அவருடைய ஏக்கத்தையும், அவருடைய மன மற்றும் சரீர சுத்தத்தையும் நாம் கற்றுக்கொள்ளும்போது, நம்முடைய முகம் மற்றும் சரீர தோற்றம்கூட அவருடைய குணங்களை அடைந்துவிடும். நம்முடைய சரீர தோற்றத்தில் இருந்தே, நாம் சாந்தத்தையும், பரிசுத்தத்தையும் கிறிஸ்துவின் அன்பையும் வெளிப் படுத்துவோம்.

## VIII. நாம் கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறோம் :

இந்த உலகில் உள்ள அநேகருக்கு, கிறிஸ்துவை அவர்கள் பார்க்க வேண்டும் என விரும்பினாலும் அவர் தூரமாயிருக்கிறார்; ஆகையால் அவரை அவர்கள் பார்க்க முடியாது. அவர்களுக்கு அவருடைய வார்த்தையில் பழக்கமுமில்லை; அவர்கள் அவருடைய அன்பை உணர்ந்ததுமில்லை. பரலோகில் உள்ள அவரை, பார்க்க முடியாத நிலையில் இருந்து அழைத்துவர ஒரே ஒரு வழி கிறிஸ்துவின் மூலமே உண்டு.

"நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப்போகாமல், எப்பொழுதும்போல இப்பொழுதும் மிகுந்த தைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய், அப்படி முடியும்." (பிலி.1:20)

ஒரு பூதக்கண்ணாடி (Magnifying Glass) உண்மையில் எந்தப் பொருளின் அளவையும் பெரிது படுத்தாது. மேலும் அது தூரத்தையும் உண்மையில் குறைக்காது. ஆனால் அந்தக் கண்ணாடி ஒரு பொருளை அருகில் உள்ளதாகவும், பெரியதாகவும் இருப்பதைப்போலக் காட்டுகிறது. அப்பொழுதுதான் துள்ளியமான தகவல்களை நாம் பார்த்து படிக்க முடியும்.

அதே வண்ணமாக, ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய குடும்பத்தில், நண்பர்களுக்குள், தன்னுடைய எல்லா ஈடுபாடுகளிலும் கிறிஸ்துவை கொண்டு வருகிறான்; அப்பொழுது தான் அவனுடைய சொந்த தனிப்பட்ட வாழ்வின் மூலமாக அவர்கள் அனைவரும் கிறிஸ்துவை தங்கள் கை எட்டும் தூரத்தில் காண முடியும். இது, என்ன ஒரு அருமையான வாய்ப்பு! நான், கிறிஸ்து மற்றும் மனிதகுலத்திற்கு இடையில் உள்ள இடைவெளியை நிரப்பும் ஒரு பாலமாக இருக்க முடியும்! அறியாத இந்த உலகத்திற்கு இயேசுவை சித்தரிக்கும் சிலாக்கியம் என்பது என்ன ஒரு வாய்ப்பு!

ஆனால், எனக்குள் பெரிதுப்படுத்திக் காட்டப்படும் அவருடைய (இயேசு) உருவம் சிரழிந்து மங்கிப்போவது என்ன ஒரு பரிதாபம்!

**இறுதியாக,**

பாவத்தில் மரித்த நிலையில் இருந்து, தேவனுடைய குடும்பத்தில் பிறந்ததின் மூலமாக கிறிஸ்துவுக்குள் உயிர்பெற்று, பின்பு நம்முடைய வாழ்வில் கிறிஸ்துவின் சாயலை தரித்துக் கொள்ள கற்றுக்கொள்வது, ஆகிய இது போன்ற மாற்றங்கள் மிக நேர்த்தியான ஒன்று. இந்த

சத்தியங்களை நாம் கேள்விப்பட்டு, அவைகளின்படி நடப்பதற்காக எவ்வளவு நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

### *பாடக்கேள்விகள்*

1. "செய்ய வேண்டியவை", "செய்ய வேண்டாதவை" என தேவன் ஏன் கொடுத்துள்ளார்?
2. "குடும்பத்தில்" உள்ள ஒரு கிறிஸ்தவன் உலகத்தில் இருக்கிறானா?
3. மற்ற எந்த மதத்திலும் இல்லாத ஒரு உண்மை, கிறிஸ்துவின் மதத்தில் மட்டும் பிரத்யேகமாக உண்டாயிருப்பது என்ன?
4. எந்த இரண்டு வழிகளில் ஒரு பொருள் உருமாற முடியும்?
5. ஒரு புதிய கிறிஸ்தவனுக்குள்ளாக தேவனுடைய செயல்பாட்டை விளக்க என்ன வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது? தேவனுடைய எந்த முந்தைய செயல்பாடுகளை இந்த வார்த்தை குறிக்கிறது?
6. மாம்ச (உலக) மனதுடையவர்களிடமிருந்து நாம் என்ன விளைவை எதிர்பார்க்கலாம்?
7. ஆவிக்குரிய மனதுடையதாயிருத்தல் நம்முடைய வாழ்வில் என்ன கொண்டு வரும்?
8. ஒரு காரியத்தை நாம் வெகுநாட்களாக திரும்பிச்செய்து கொண்டு (Imitate) இருப்போமானால், அது நம்மை எவ்வாறு பாதிக்கும்?
9. தேவனுடைய வார்த்தையில் நாம் கிறிஸ்துவின் சாயலைப் பார்ப்போமானால் கொஞ்சம் கொஞ்சமாக நமக்கு என்ன நடக்கும்?
10. நம்முடைய சரீரத்தில் கிறிஸ்துவை மகிமைப்படுத்துவது (காணச்செய்வது) எவ்வாறு சாத்தியம்?



# பரிசுத்த விருந்தினர்கள்

## (THE HOLY GUESTS)

### புறக்குறிப்பு – OUTLINE

**அறிமுகம்:**

**I. பிரச்சனைக்கான தீர்வு**

அ. கிறிஸ்துவுக்குள்

ஆ. ஆவியின்படி நடப்பதினால்

**II. உள் வாசம்பண்ணுதல்**

அ. தேவனுடைய ஆவி (ரோ.8:9)

ஆ. கிறிஸ்துவினுடைய ஆவி (ரோ.8:9)

இ. பரிசுத்த ஆவி (ரோ.8:10, அப்.2:38, 5:32)

**III. தேவனுடைய பிள்ளைகள்:**

அ. ஆவியினால் வழிநடத்தப்படுதல் (ரோமர் 8:14).

ஆ. குமாரத்துவத்தை அறிதல் (ரோமர் 8:15)

இ. ஆவியினால் பெலப்படுத்தப்படுதல் (எபே.3:16)

ஈ. உள்ளான மனிதன் புதிதாக்கப்படுதல் (2 கொரி.4:16)

உ. ஆவியினால் விளக்கப்படுதல் (ரோமர்.8:26)

**IV. தேவனுடைய ஆலயம்**

அ. பழைய ஏற்பாட்டில் அர்த்தம்

ஆ. புதிய ஏற்பாட்டில் அர்த்தம்

1. திருச்சபை (எபேசி.2:19-22).
2. தனிப்பட்ட வகையில் (1 கொரி.3:16, 6:19,20)

**V. விருந்தினர்களுடன் உள்ள உறவு:**

அ. மகிழ்ச்சி (செப்பனியா 3:17)

ஆ. துக்கம் (எபேசி.4:30.எபி.10:29)

இ. அவித்துப்போடுதல் (1தெச.5:19)

ஈ. கடந்து போதல் (யோபு 21:14)

**VI. விருந்தினர்களுடன் நடந்துகொள்ளும்முறை:**

அ. மாம்சப்பிரகாரமாக

ஆ. ஆவிக்குரிய பிரகாரமாக

**முடிவுரை:**

ரோமர் 7ம் அதிகாரத்தில் மனிதனுடைய நம்பிக்கையற்ற நிலையைப் பற்றி உள்ள அழகான படம் போன்ற செய்தி, ரோமர் 8:11ல் அவர் சொல்வதைப் போல "இயேசுவை மரித்தோரில் இருந்து எழுப்பினவருடைய ஆவி நம்மில் வாசமாயிருந்தால் ஜெயமாக மாறும்.

# பரிசுத்த விருந்தினர்கள்

## பாடம் - LESSON

**அறிமுகம்:**

ரோமர் 7ம் அதிகாரத்தில், பவுல் தன்னுடைய உடலில் நன்மை செய்வதற்கான ஆவல் உள்ளதையும், ஆனால் மனித சரீர பெலவீனத்தால் பாவம் செய்வதையும் பற்றிய நம்பிக்கையற்ற போராட்டத்தைப் பற்றி கூறுகிறார். "நிர்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" என்று பவுல் முடிக்கிறார்" (ரோமர் 7:24).

மனிதன் நிச்சயமாக பாவம் செய்வான். அவன் நீதியாக வாழ விரும்பும் வாழ்க்கையில் இருந்து தினந்தோறும் தவறுகிறான்; மேலும் அதனால் அவனுடைய மனசாட்சி தேவனுக்க முன் குற்றப்படுத்துகிறது. இன்று செய்த் பாவங்கள், அதோடு நேற்றைய பாவங்களை சேர்த்து, அதோடு வாழ்நாள் முழுமையும் உள்ள பாவங்களையும் சேர்த்தால், அதனுடைய எடையை மனிதன் உணரும்போது, மனிதன் நிச்சயமாக வெறுப்பு மற்றும் நம்பிக்கையில்லா நிலையை உணருகிறான்.

## I. பிரச்சனைக்கான தீர்வு :

மனிதன் தானாக தனக்கு உதவி செய்து கொள்ள முடியாத நிலை. அதனால் தேவன் தன் னுடைய பிள்ளைகளுக்கு 2 பரிசுகளின் மூலம் இதற்கான தீர்வைக் கொடுத்தார்.

**முதலாவது பரிசு:** அவருடைய குமாரனே! மேலும் இயேசுவின் மூலம் அவருடைய (தேவன்) பிள்ளைகளாவது ஆகும். ஒரே இரத்தத்தினாலான குடும்ப அங்கத்தினர். நாம் கிறிஸ்தவர்களாகும் போது, நாம் இயேசுவின் இரத்தத்தினால் கழுவப் பட்டோம் என்றும், அது நம்முடைய பாவங்களை மன்னித்தது என்றும் திருமறை வாக்கியங்கள் போதிக்கின்றன. ஆகையால் தேவன் நம்மைப் பார்க்கும்போது, அவர் நம் குடும்ப இரத்தமாகிய (இயேசுவின் இரத்தம்) சிவப்பு திரைச்சீலை வழியாக பார்த்து, நம்மை சிறந்த பிள்ளைகளாகப் பார்க்கிறார். அந்த மூடுதலினுடைய தொடர்ச்சி யான சுத்திகரிப்பினால் (1யோ.1:7), நம்முடைய பெலவீனம் மற்றும் குற்றங்கள் நம்முடைய கணக்கில் கொண்டுவரப்படுவதில்லை (2கொரி.5:19).

**இரண்டாவது பரிசு,** நாம் "கிறிஸ்துவுக்குள்" பெற்றுள்ள புது பெலனாகும்.

## அ. கிறிஸ்துவுக்குள்

"ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை" (ரோமர் 8:1).

"அவர் ரொம்ப நல்லவர்; நிச்சயமாக தேவன் அவரை தண்டிக்கமாட்டார்", "சுவிசேஷத்தைக் கேள்வியே படாதவர்களை தேவன் தண்டிக்க மாட்டார்னு உங்களுக்குத் தெரியுமா?", "திருச்சபை என்ன அவ்வளவு முக்கியமா? ஏன், எந்த திருச்சபையானாலும் அதில் உள்ள நேர்மையான, நல்ல மக்கள் இரட்சிக்கப்படமாட்டார்களா என்ன?" என்றெல்லாம் இன்று சாத்தான் கோடிக்கணக்கானவர்களை வஞ்சித்துக் கொண்டிருப்பது, என்ன ஒரு பரிதாபம்?

தேவனுடைய கட்டளைகளின் மதிப்பைக் குறைக்கவும், நம்முடைய மற்றும் எல்லா உலக மக்களின் மனசாட்சியையும் கெடுக்கவும் இந்த பொய்கள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவை. ஆனால் உண்மை என்ன தெரியுமா? தேவன் தன்னுடைய ஒரே திட்டத்தை தன்னுடைய குடும்பத்தில் கொடுத்துள்ளார்; மேலும் நாம் பாவத்தில் இருந்து மீட்கப்பட அந்த குடும்பத்தின் அங்கமாயிருக்க வேண்டும். அவருடைய கும்ார னில் விசுவாசம் வைத்து, மரணத்திற்குள்ளாக திருமுழுக்குப் பெற்றதால் தான் நாம் தேவனுடைய கட்டளைகளின் மூலம் அந்தக் குடும்பத்தில் அங்கமாக முடியும். பின்பு நாம், கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாயிருக்கிறோம். (2 கொரி.5:17).

## (ஆ) ஆவியின்படி நடப்பதினால்

"கிறிஸ்துவுக்குள் ஆக்கினையில்லை" இது நிபந்தனைக்குட்பட்டது. நம் பிறப்பின் (கிறிஸ்து வுக்குள்) பின்பு நம் விருப்பத்தின்படி வாழ இயலாது. மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடப்பவர்களுக்கே ஆக்கினைத் தீர்ப்பில்லை. ஒருவன் தேவனுடைய பிள்ளையான பின்பு, எவ்வளவு பெரிய பாவம் செய்தாலும் முற்றிலுமாக அழிந்து போவதில்லை என்று சில நாமகரண கூட்டங்கள் தவறாக போதிக்கின்றனர். ஆனால் தேவ வசனங்களோ, உண்மையுள்ளவர்களாய் இருக்கிறபடியால் வசனம் உற்சாகப்படுத்துவதோடு, பெலவீனப்பட்டு விழ்ந்து போகாதபடி எச்சரிக்கவும் செய்கிறது.

பாவத்திற்கு எதிரான இந்த போர்க்களத்தில் நம் பங்கை சிறப்பாக நாம் செய்யவேண்டியது அவசியமாகிறது. தேவனுக்காக வாழவேண்டும் என்ற உண்மையான விருப்பம் உடையவர்களாய், பாவத்தைத் தவிர்க்க எல்லாவித முயற்சியும் உடையவர்களாய் நாம் இருக்க வேண்டும்.

மனிதன் தனக்கு தானே செய்ய வேண்டிய காரியங்களில் ஒருபோதும் தேவன் மனிதனுக்காக செய்வதில்லை. கிறிஸ்தவ ஜீவியத்திலும் அது உண்மையே. உண்மையாய், ஆவிக்குரியவர்களாய் இருக்கும்படி நாம் தினமும் முயற்சி செய்ய

வேண்டும்.

மனிதனுடைய பெலன் முடிந்தபின்பு, நம்மில் இல்லாத பெலத்தைத் தருவதே தேவனுடைய பங்காக இருக்கிறது.

## II. நம்மில் வாசமாயிருத்தல்:

தேவஆவி மனிதனில் வாசமாயிருப்பதில்லை என்று சிலர் மறுக்கின்றனர். தேவனுடைய வார்த்தை நம்மில் இருப்பதுதான் "வாசமாயிருப்பது" என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் இந்த முடிவுக்கு வருமுன், ரோமர் 8ல் பவுல் கூறுவதை மறந்து விட்டனர்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் யூதர்களுக்கு தேவனுடைய வார்த்தை இருந்தது. வேதத்தின் பக்தி நிறைந்த மாணவனாகவும், விசுவாசமுள்ள யூதனாகவும் பவுல் இருந்தார். இயேசுகிறிஸ்து வின் சீஷர்களுக்கு பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வார்த்தையின் அறிவு இருந்தவுடன், புதிய ஏற்பாட்டின் வார்த்தைகளையும் இயேசு கிறிஸ்து கற்றுக் கொடுத்து அவர்கள் அறிந்திருந்தனர்.

இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன்பு, கீழ்படிகிறவர்களுடனே ஆவியானவர் இருந்தார் (நியா.13:25; 1 சாமு.16:14). ஆனால் இயேசு கிறிஸ்து தன் சீஷர்களுடன் இப்படி சொல்வதின் மூலம் ஒரு பெரிய மாற்றம் இருக்கிறது என்று வாக்குத்தத்தம் செய்தார். "நாம் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்கு தந்தருளுவார். உலகம் அந்த சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ள மாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்" (யோவான்.14:16,17).

**அ. தேவனுடைய ஆவி:**

"தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள்" என்று ரோ.8:9 கூறுகிறது.

**ஆ) கிறிஸ்துவின் ஆவி:**

"... கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" (ரோமர்8:9). எதிர்காலத்தில் குறிப்பிட்ட சமயத்திலிருந்து ஆவியானவர் அவர்களுடன் இருப்பார் என்று இயேசுகிறிஸ்து சீஷர்களுக்கு வாக்குத்தத்தம் செய்து, "நான் உங்களை திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத் தில் வருவேன்;... நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்" (யோ.14:18-20).

**இ) பரிசுத்த ஆவி:**

சபையின் பிறந்தநாளன்று, பிரசங்கத்தை கேட்டுக்கொண்டிருந்தவர்கள், தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட என்னசெய்ய வேண்டும் என்று கேட்டபொழுது,

பேதுரு பிரதியுத்தரமாக "மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்கு என்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப்.2:38).

வசனம் 39ல் "வாக்குத்தத்தம் செய்யப்பட்ட படி, சுவிசேஷத்தின் அழைப்பால் உலகம் முழுவதற்கும் கிடைக்கக்கூடிய இரட்சிப்பு" என்று இந்த வரத்தைக் குறித்து சிலர் கூறுகின்றனர்.

புதிய பிறப்பின்பொழுது ஆவிக்குரிய வாழ்க்கையில் உண்டாகக்கூடிய உற்சாகம் என்று இந்த வரத்தைக்குறித்து சிலர் கூறுகின்றனர்.

பரிசுத்த ஆவியானவர்தாமே, புதியதாய் பிறந்த தேவனுடைய பிள்ளைக்குள் வாசம் செய்வது என்றும் சிலர் கூறுகின்றார்.

உண்மையில், இந்த மூன்று நம்பிக்கை களும் வசனத்துடன் ஒத்துசெல்கிறது. ஒரு விசுவாசிக்கு இந்த மூன்றுமே ஞானஸ்நானத்தின் மூலம் கிடைக்கக்கூடிய பலனாயிருக்கிறது.

"இந்த சங்கதிகளைக் குறித்து நாங்கள் சாட்சிகளாய் இருக்கின்றோம். தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள்" (அப்.5:32).

மேலும் ரோமர் 8:10,11ல், "மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியின்நிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். அன்றியும், இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக் கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.

## III. தேவனுடைய பிள்ளைகள்:

நம்மில் வாசமாயிருப்பதை குறித்து அநேகர் அறியாதிருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது. இதைக்குறித்து அவர்களுக்கு போதிக்கப்படாததால், தேவன் வாக்குத்தத்தம் செய்த இந்த உதவியைப் பற்றி அறியாதிருக்கிறார்கள். இந்த "வாசமாயிருத்தல்" ஏதோ ஒரு அற்புதகரமான தாக இருப்பதில்லை என்பதால், ஞானஸ் நானத்திற்கு பின்பு அவர்கள் உணர்வுகளில் மாற்றம் இருப்பதில்லை. இந்த உதவியைக் குறித்த அறிவு அவர்களுக்கு இல்லாதிருப்ப தினால், பெலன் தேவைப்படும்பொழுது இந்த உதவியைச் சார்ந்தோ, அல்லது

அதற்காக அழைப்போவிடுப்பது இல்லை. தேவன் அவர்கள் வாழ்வில் வேலை செய்யும்படியாக அனுமதிப்பது இல்லை. ஆகையால், அவர்கள் எந்த ஒரு மாற்றத்தையும் காண்பதில்லை. மேலும் பாவத்திற்கு எதிரான இந்த போராட்டம் முன்பு போல் கடினமானதாகவும், தாங்களோ பெலவீனமும், உதவி யற்றவர்களுமாய் உணர்கின்றனர். உண்மையில் "என் ஜனங்கள் அறிவில்லாமையால் சங்காரமாகிறார்கள்" (ஓசி.4:6)

**(அ) ஆவியினால் வழிநடத்தப்படுதல்:**

தேவனுடைய புத்திரர்கள் "ஆவியானவரால் நடத்தப்படுகின்றனர்" (ரோ.8:14). தேவனுடைய ஆவியானவர் நம்மை அற்புதமாய் வழிநடத்துகிறார் என்றோ அல்லது அவருடைய வார்த்தையை ஒலியுள்ள சத்தமாய் கேட்போம் என்றோ அர்த்தம் அல்ல; இதன் அர்த்தம்:

1. நம்மை நாமே தேவனுடைய வசனத்தின் வழி நடத்துதலுக்கு அர்ப்பணித்து, நம் சிந்தை களுக்கான ஆரோக்கியமான அறிவுரைகளை வசனத்திலிருந்து தெரிந்துகொளுதல்.
2. நம் வாழ்க்கையில் சில தீர்மானங்கள் எடுக்கும் படியாய் நாம் தேவனிடத்தில் உதவி கேட்கின்றோம். நாம் எடுக்க வேண்டிய தீர்மானங்களில் கவனிக்க வேண்டிய சில முக்கியமான காரியங்களை நமக்கு நினைவுபடுத்துவதின் மூலமும், சில காரியங்கள் தெளிவாய் ஞானமாய் சிந்திக்கவும் உதவி செய்கிறார்.
3. தேவன் ஞானம் தரும்படியாய் அவரை ஜெபத்தின் மூலம் சார்ந்திருப்பது (யாக்.1:5) இதன் மூலம் நம் தீர்மானங்களை தேவனுடைய ஆவியின் வழிநடத்துதலால் தேர்ந்து எடுக்கிறோம் என்ற நம்பிக்கை உண்டாகிறது.

**(ஆ) குமாரத்துவத்தை அறிதல்:**

இயேசுகிறிஸ்துவின் ஆவி நம்மில் வாசமாயிருப்பதால், நாம் தேவனுடைய புத்திரர் என்ற உறவு உடையவர்களாயிருக்கின்றோம். அவருடைய ஆவியினால் "அப்பா, பிதாவே" (ரோ.8:15) என்று அழைக்கின்றோம். கலா.4:6,7ல் "மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால் கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்".

நாங்கள் குடும்பமாக, இந்திய துணைக்கண்டத்தில் அநேக நாட்கள் வாழ்ந்திருக்கிறோம். சில பிள்ளைகள் அழுக்கு துணியுடன் நின்று பிச்சை கேட்பதை நாம் கவனித்து இருக்கின்றோம். அவர்களைப் பார்க்கவே

வருந்தத்தக்க நிலையில் கந்தை உடையுடன் நின்று அழுகுரலில் பிச்சை கேட்டுக்கொண்டிருப்பார்கள். தாங்கள் வருந்தி கேட்காவிட்டால் கிடைக்கவேண்டிய உதவியை இழந்துவிடுவோம் என்ற பயத்தில் ஏதாவது தருமாறு நம்மை தொடர்ந்து வந்து மறுபடியும் மறுபடியும், நாம் தருகின்றவரை பிச்சை கேட்டுக் கொண்டே இருப்பார்கள். இதற்கு மாறாக, எங்கள் பிள்ளை, 'சானன்' ஒரு புன்சிரிப்புடன் அல்லது கட்டிப்பிடித்து அல்லது முத்தமிட்டு, "அம்மா நீங்க வெளியில போகும்போது எனக்கு ஒரு புக் வாங்கிட்டு வாங்க" என்பான்.

நாம் எந்த சிந்தையுடன் தேவனை நெருங்குகின்றோம்? சில வேளைகளில் அந்த பிச்சைகாரருடைய எண்ணத்தில் தேவனுக்கு முன்பதாக நின்றதை நினைத்து குற்றமனப்பாண்மைக்கு உள்ளாகியிருக்கின்றேன். நாம் பிச்சைக்காரர்கள் அல்ல; நாம் நம்பிக்கையில்லாமல், இழந்துபோவோம் என்ற பாதுகாப்பற்ற சிந்தையுடன் தேவனை அனுகினால் நாம் அநீதி செய்கின்றோம். நம் பிள்ளைகள், பிச்சைகாரர்களுக்கு உரிய சிந்தையுடன் நம்மை நெருங்கினால் நாம் என்ன நினைப்போம்?

நாம் தேவனுடைய புத்திரர்கள். நம் தேவன் நம்மை நேசித்து நம் தேவைகளை சந்திக்கும்படியாய் விரும்புகின்றார். நாம் அவரை விசுவாசித்து, அவருடைய வாக்குத்தத்தங்கள் மேல் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். "ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்" (எபி.4:16).

**(இ) ஆவியினால் பெலப்படுத்தப்படுதல்:**

மனிதனுடைய பெலம் பெலவீனமானது. தேவன் அதை அறிந்திருக்கின்றார். இந்த மாம்ச வாழ்க்கையில் நீதியாய் வாழ நாம் எடுக்கும் முயற்சியில் தோல்வியடைந்தோம் என்ற உணர்வுள்ளவர்களாய் நாம் இருப்பதை அவர் விரும்புவது இல்லை. ஆகையால் "நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்... அவர் தமது மகிமையின் ஐசுவரியத்தின்படியே அநுக்கிரகம் செய்கின்றார்" (எபே.3:16).

"மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடேகூட அதற்குத் தப்பித்துக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" (1 கொரி.10:13).

நாம் விழுந்துபோகாமல் நிலைநிற்கும்படியாக தேவன் தன் பங்கை செய்து பாதுகாப்பார் என்ற வாக்குத்தத்தங்களினால் கிறிஸ்தவர்களாகிய நாம் உறுதிப்படுத்தப் படுகின்றோம். அவர் நம் உள்ளான மனிதனை பெலப்படுத்துகிறார். நமக்கு மகா பெரியதாய் தோன்றுகிற சோதனைகளில் இருந்து நம்மைப் பாதுகாத்து, அதற்குத் தப்பும்படியான வழியையும் கொடுக்கின்றார். தேவனுடைய எல்லா உதவிகளுக்கு பின்பும், நாம் விழுந்துபோவோமேயாகில், அது நம் சொந்த விருப்பமாக இருக்குமே தவிர, அவர் நம்மை கைவிடுவது இல்லை.

**(ஈ) உள்ளான மனிதன் புதிதாக்கப்படுதல்:**

நாம் மரிக்கக்கூடிய சரீரத்தில் வாழ்கின்றோம் என்பது ஆவிக்குரிய உண்மை. நம் பிறப்பில் இருந்து, நம் சரீரத்தில் உள்ள இலட்சக்கணக்கான செல்கள் (அணுக்கள்) மரித்து, புதிய செல்கள் அதன் இடத்தை நிரப்பி, குறிப்பிட்ட காலத்திற்குப் பின்பு இந்த புதிய செல்களும் மரிக்கின்றன. நாம் வாழ்ந்து வளர்ந்து வாலிப பருவத்தை அடைந்து, பின்பு முதிர்வயதை அடைந்து, நம் சரீரம் மரணத்தை நோக்கி வளர்கிறது என்றும், முன்பு போல் பெலத்துடன் காரியங்களைச் செய்ய முடியவில்லை என்றும் உணர்கின்றோம்.

2 கொரி. 4:16 “ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது” என்று கூறுகிறது. மனிதனுடைய ஆத்துமா, தேவ ஆவியினால் பெலப்படுத்தப்பட்டு, உறுதியாய் வளர்ந்து, ஞானமுள்ளதாய் நாளுக்கு நாள் முதிர்ச்சி அடைகிறது.

**(உ) ஆவியினாலே விளக்கப்படுதல்:**

மிகப்பெரிய பயத்தில், எதிர்பார்ப்பில், வேதனையில், தவிப்பில் இருக்கும் வேளைகளில் நாம் நம் தேவைகளை சரியான வார்த்தையைக் கொண்டு தேவனிடத்தில் தெரிவிக்க இயலாது. அந்த வேளைகளில் தேவ ஆவியானவர் நமக்கு உதவுகின்றார். “அந்தப்படியே, ஆவியானவரும் நம்து பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியது இன்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்” (ரோ.8:26).

## IV. தேவனுடைய ஆலயம்:

**அ. பழைய ஏற்பாட்டில் அர்த்தம்:**

கிரேக்க மொழியில் “ஆலயம்” என்ற வார்த்தைக்கு இரண்டு வார்த்தை உபயோகிக்கப்பட்டுள்ளது. “ஹைரன்” என்ற வார்த்தை உள்ளடக்கி, முழு தேவாலயத்தையும் குறிக்கிறது. “நாவோஸ்” என்ற வார்த்தை தேவனுடைய

பாசஸ்தலத்தை குறிக்கிறது. பழைய ஏற்பாட்டில் பொதுமக்கள் "ஹைறன்" பரை போய் வந்தனர். ஆனால் தேவன் ஸ்தாபரிக்கும் வாசஸ்தலமாகிய தேவசமூகமாகிய "நாவோஸ்"சில் ஆசாரியர்கள் மட்டுமே பிரவேசிக்க முடிந்தது.

**ஆ. புதிய ஏற்பாட்டில் இதன் அர்த்தம்:**

தேவனுடைய "நாவோஸ்" சீனாய் மலையோ, மகா பரிசுத்த கூடாரமோ, ருசலேம் தேவாலயத்தின் மகா பரிசுத்த ஸ்தலமோ அல்ல என்ற அருமையான உண்மை புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் தேவனுடைய "நாவோஸ்", தேவனுடைய வாசஸ்தலம், அவருடைய குடும்பமே.

**1. சபை**

"ஆகையால் நீங்கள் இனி அந்நியரும், பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர் களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாய் இருக்கிறீர்கள். அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்".

"அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக (நாவோஸ்) எழும்புகிறது; அவர்மேல் நீங்க ளும் (ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள் (எபே.2:19-22).

**2. தனிப்பட்ட வகையில்**

அவருடைய குடும்பமாகிய சபையில் மட்டுமே தேவனுடைய ஆலயம் அல்ல. தனித்தனியாய் நம் ஒவ்வொருவருடைய சரீரமும் அவருடைய வாசஸ்தலமாகும். "நீங்கள் தேவனுடைய ஆலயமாய் (நாவோஸ்) இருக்கிறீர்கள் என்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறது என்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்" (1 கொரி.3:16,17).

உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும், உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாய் (நாவோஸ்) இருக்கிறது என்றும், நீங்கள் உங்களுடையவர்கள் அல்ல என்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவை களாகிய உங்கள் சரீரத்தினாலும் ஆவியினாலும், தேவனை மகிமைப் படுத்துங்கள்" (1 கொரி.6:19-20).

பரிசுத்த விருந்தினர்கள் நம் சரீரத்தில் வாசம் செய்வதினால், நம்

சரீரத்தினால் செய்யும் ஒவ்வொரு செயலையும் குறித்து கவனமுள்ளவர்களாய் (நாம்) இருக்க வேண்டும்.

## V. விருந்தினர்களுடனான உறவு:

என்னுடைய நண்பன், என் உடலை மட்டும் தான் எடுத்துக்கொண்டு (அதில் என் ஆத்துமா செயலற்று இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம்), அவன் விரும்பும் பாவங்களையும், பிறரை துன்புறுத்த என் கரங்களையும், விக்கிரகங் களை வணங்க என் தலையையும் இப்படி பல பாவங்களையும் செய்து வந்தால் எப்படி இருக்கும்? என்னையே தவறான செயல்களில் ஈடுபடுத்தும் இப்படிப்பட்ட செயல்களினால் நான் வருந்த மாட்டேனா?

தேவன் நமக்குள் வாசம் செய்கிறார். ஆகவே நாம் எதைச் செய்தாலும், அவருக்கே அதைச் செய்கிறோம். ஆகவே, நாம் நம்முடைய சரீரத்தை தேவன் வாழும் ஆலயமாக வைத்துக் கொள்ள வேண்டும். தேவன் நம்முடைய விருந் தினர் போல நம்முடைய அவருக்கான செயல்பாடுகள் குறித்து பாவிக்கிறார்.

**(அ) மகிழ்ச்சி**

"உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார்; அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்" (செப்.3:17) என்று கூறப்பட் டுள்ளது. நாம் தேவனுக்கே மகிழ்ச்சியை உண்டு பண்ண முடியும் என்ற கருத்து எவ்வளவு அருமையானது; மேலும் நம்முடைய நீதிக்காக அவர் அகமகிழ்வார் என்பது மகிழ்ச்சியே.

"அவர் தமது அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்" என்று வேதம் கூறுகின்றது. மனக்கலக்கத்தில் உள்ள ஒரு மகனை ஒரு அன்பான தகப்பன் அமைதிப்படுத்தி, ஆறுதல்ப்படுத்துவதுபோல, அல்லது தன் மனைவியை நேசித்து சமாதானமாக இருக்கும் ஒரு கணவனைப்போல, இந்த வசனங்கள் நிச்சயமாக தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான ஒரு அழகான உறவைக் குறிக்கும்.

"அவர் உன்பேரில் கெம்பீரமாய் களிகூருவார்" நான் தேவனை நேசிக்கும்போது, என்னுடைய அன்பிற்கு பதிலாக, அவர் சந்தோஷமாக பாட்டு பாடுகிறார் என்பது எனக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது.

**(ஆ) துக்கப்படுத்துதல்**

"கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏது வான நல்ல வார்த்தை உண்டானால், அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.

அன்றியும் நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" (எபே.4:29,30). மேலும் எபி.10:29. கூட ஆராதனையை தவறவிட்டு நாம், இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தத்தை சாதாரணமாய் நினைத்து "கிருபையின் ஆவியை நிந்தித்தோம்" என்று சொல்கிறது.

**(இ) அவித்துப்போடுதல்**

"ஆவியை அவித்துப்போடாதிருங்கள்" (1 தெச.5:19). சங்.78:41 சொல்கிறது, நம்முடைய கீழ்படியாமை அல்லது ஒத்துழையாமையினால் இஸ்ரவேலின் பரிசுத்தரை நாம் கட்டுப்படுத்த முடியும் என்று விசுவாசக்குறைவினாலும், ஆழமாக செயல்பட மனதில்லாமையினாலும் எத்தனைமுறை தேவனை நாம், அவர் நம் வாழ்வில் செய்ய விரும்பிய பெரிய காரியங்களில் இருந்து கட்டுப்படுத்தியுள்ளோம்!

நாம் அனுமதித்தால் மட்டுமே, அவர் நமக்காக காரியங்களை நடப்பிக்க முடியும் என்பதை நாம் எப்பொழுதுமே நினைவில் வைக்க வேண்டும். நாம் தனித்து செய்ய சாத்தியமானவைகளுக்கு மேலாக நம்முடைய தரிசனம் செல்லவில்லை என்றாலும், நம்மால் தனித்து செய்ய முடிந்ததற்கு மேலாக நாம் எந்த வேலையையும் செய்யவில்லை என்றாலும், தேவன் காரியங்களை நடப்பிக்க நாம் சிறிதளவே இடம் கொடுக்கிறோம்.

**(ஈ) நம்மை விட்டு பிரிதல்**

கடினமான மனோநிலை மற்றும் கீழ்படியாமையினால் கீழ்படியாத பிள்ளை தேவனைவிட்டு பிரிந்து, அவரும் ஆலயமாகிய நம் சரீரத்தில் இருந்து பிரிய முடியும். "அவர்கள் தேவனை நோக்கி: எங்களைவிட்டு விலகியிரும், உம்முடைய வழி களை அறிய விரும்போம்" (யோபு.21:14).

## VI. உறவினர்களுடனான நடவடிக்கைகள்:

**அ. மாம்சப்பிரகாரம்**

நம் வீட்டிற்கு வரும் உறவினர்களை எவ்வாறு உபசரிக்க வேண்டுமென்று நமக்கு நன்றாகத் தெரியும். அவர்களுடன் அன்பாக இருந்து, சிறந்ததைக் கொடுத்து கவனிப்போம். எல்லா நற்பண்புகளையும் அவர்களிடம் காண்பித்து, அவர்கள் விருப்பத்திற்கு அவர்களை உபசரித்து அவர்களை திருப்தி செய்வோம். விருந்தினர்கள் வந்திருக்கும்போது, நம் சொந்த குடும்ப நபர்களுடன் முன் எப்போதும் இல்லாத அளவு பொறுமையும், பாசமும் காட்டுவோம்.

**(ஆ) ஆவிக்குரிய பிரகாரம்**

ஆவிக்குரிய வகையில், நம்முடன் எப்பொழுதுமே 3 பரிசுத்த விருந்தினர்கள் உள்ளனர். இதை நாம் மனதில் வைத்துக்கொண்டால், நாம் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாதென அறிந்து அவர்களுடன் சிறப்பாக நடப்போம். இயற்கையாக, நாம் எந்த காரியங்களை செய்ய வேண்டும், எப்படி செய்யக்கூடாது என அறிந்து, அவர்களுடைய வருகை நமது நன்மை செய்யும் ஆற்றலை அதிகரிக்கும்.

**இறுதியாக...**

இந்த புதிய வாழ்விலே நாம் "தேவனுக்காக வாழவேண்டும்". ஆனால், "அவர்" நமக்குள் வாழாமல் இது சாத்தியமல்ல. அவரே தலைவர். நாம் சரீரம் (கொலோ.1:18).

## *கேள்விகள்*

1. பவுல் என்ன பிரச்சனையினால் போராடினார்?
2. அவர் என்ன தீர்வு கண்டார்?
3. பரிசுத்த விருந்தினர்கள் யார்?
4. ஆவி நம்மை எப்படி வழிநடத்துகிறது?
5. ஆவியானவர் வேறு எந்த வழிகளில் தேவனுடைய பிள்ளைகளுக்கு உதவுகிறார் என்று விவரியுங்கள்.
6. "நாவோஸ்" என்றால் என்ன?
7. "குடியிருக்கும் இடம்" அதாவது தேவனுடைய ஆலயத்தைக் கண்டுபிடியுங்கள்.
8. நம்முடைய தனிப்பட்ட மாம்ச சரீரத்தைப் பற்றி 1கொரி.3:16 மற்றும் 6:19,20 வசனங்கள் என்ன சொல்கிறது?
9. நம்முடைய பழக்க வழக்கங்கள் (செயல்கள்) தேவனை பாதிக்குமா?
10. நம்முடைய பரிசுத்த விருந்தினர்களின் பிரசன்னத்தைப் பற்றிய அறிவு நம்முடைய நடத்தையை பாதிக்க வேண்டுமா?



# தெய்வீக சுபாவத்திற்கு பங்காளிகள்

## *(PARTAKERS OF DIVINE NATURE)*

### புறக்குறிப்பு – OUTLINE

**அறிமுகம்:**

அணுக்களில் இருந்து பெறுவதின் (Genitic Inheritance) நிமித்தமாக, ஒரு மாம்ச குடும்பத்திலுள்ள நபர்கள் ஒருவருக்கொருவர் சில ஒற்றுமைகளை பெற்றுள்ளனர். அதேவண்ணமாக ஆவிக்குரிய வகையில் நாம் நம்முடைய பரலோகப் பிதாவின் ஒற்றுமையில் வளருகிறோம்.

**I. ஒரு ஆவிக்குரிய குடும்பம் இருக்கிறது:**

அ. தேவன் - நம் தகப்பன்; கிறிஸ்து - நம் சகோதரன்

ஆ. முன்அறிதல் (ரோமர் 8:29)

**II. தேவகுடும்பத்தில் அங்கமாக இருப்பதின் மகிமை :**

அ. குடும்பத்தை பிரதிநிதுத்துவப்படுத்தல்

ஆ. பெயரை தரித்துக் கொள்ளுதல்

இ. குடும்ப அதிகாரத்துடன் பேசுதல்.

**III. குடும்பத்தின் ஒற்றுமை :**

அ. சகோதரர்களுக்குள் அன்பு

ஆ. நம்பிக்கை மற்றும் நோக்கத்தில் ஒற்றுமை

இ. ஒருவர் மீது ஒருவருக்கு அக்கறை

ஈ. குறைபாடுகள்

உ. தகப்பன் மீது நம்பிக்கை (ரோமர் 8:31)

**IV. பரலோகவாசத்திற்கு தயாராகுதல் :**

அ. உலகப்பொருட்களில் இன்பம்

ஆ. குடும்பநலனை (விருப்பம்) அறிய வேண்டும்.

இ. கட்டுப்படுத்தி அடக்கவில்லையெனில், நித்தியமாக சந்தோஷமாயிருக்க முடியாது.

**V. நம்முடைய தகப்பனுடைய சுபாவத்திற்கு பங்காளிகள் :**

அ. மனிதஇயல்பு, செயல்பாடுகள், மோசமான கட்டுப்பாடு.

ஆ. குடும்ப சுபாவத்திற்கு பங்காளிகளாக கற்றுக்கொள்ளுதல்.

1. தவறுகளுக்கு விலகுதல்.
2. உலக இச்சை

**VI. குடும்பத்தில் சத்துவமும், அக்கறையும் பெறுதல் :**

**இறுதியாக....,**

தேவனுடைய குடும்பத்தில் இருந்து அவரையும் அவருடைய நடத்தையையும் இந்த உலகிற்கு பிரதிபலிப்பதென்பது ஒரு அருமையான மற்றும் பயங்கரமான பொறுப்பு.

# தெய்வீக சுபாவத்திற்கு பங்காளிகள்

**பாடம் - LESSON**

**அறிமுகம்:**

எங்களுடைய பேரக்குழந்தை பிறந்து, முதலில் நான் அதை பார்த்தபொழுது நான் சொன்னது, “இந்தக் குழந்தை யாரை மாதிரி இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை”. எங்கள் குடும்ப சாயல் அதனிடம் உள்ளதா என நான் தேடிக் கொண்டிருந்தேன். பின்பு அது சிறிது வளர்ந்தபின், “அவங்க அப்பா மாதிரி இருக்கு” என்று சொன்னேன்.

## I. ஒரு ஆவிக்குரிய குடும்பம் இருக்கிறது :

**அ. தேவன் – நம் தகப்பன்; கிறிஸ்து – நம் சகோதரன்:**

ஆவிக்கரிய வகையிலும் நாம் ஒரு குடும்பத்தின் அங்கம் தான். தேவன் தான் நம் தகப்பன்; கிறிஸ்து நம் மூத்த சகோதரன் மற்றும் நாம் தேவனுடன் குமாரர்கள் என்ற உறவை அவருடைய பிள்ளைகளாக பகிர்ந்து கொள்கிறோம்.

நாம் பிறந்தவுடனே, நம்மை பார்க்கும் மக்கள் குழப்பத்துடன், “இவன் யாரைப் போலிருக்கிறான் என்று என்னால் சொல்ல முடியவில்லை” எனலாம். ஆனால், நாம் குடும்பத்தில் வளருகையில், நாம் சரியாக வளருவோமானால், நாம் “சரியாக அப்பாவைப் போலவே” தெரிய ஆரம்பிப்போம். குடும்ப பிரதிபலிப்பு இல்லாமல் நாம் தேவனுடைய உண்மையான பிள்ளைகளாக இருக்க வாய்ப்பில்லை.

**ஆ. முன்குறித்தல்:**

ரோமர் 8:29 “தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்” என்று கூறுகிறது.

யாரை இரட்சிக்கவேண்டும், யாரை இரட்சிக்கக்கூடாது என்று தேவன் தன் இஷ்டப்படி முடிவு செய்கிறார் என்று நாமகர்ணகூட்ட திருச்சபையார் கூறுகின்றனர். ஆனால், அந்த வார்த்தைகளை கூர்மையாக கவனிக்கும்போது, இயேசுவின் சகோதரர்கள் எல்லாரும் அவருடைய சாயலில் இருக்க வேண்டும் என தேவன் முன்தீர்மானம் செய்துள்ளார். இன்னொரு வார்த்தையில் ‘நாம்

நம்முடைய மூத்த சகோதரனாகிய கிறிஸ்துவைப் போல் இல்லாவிடில், தேவனுடைய பிள்ளைகளாய் இருக்க முடியாது" என பொருள்படுவதைப் பார்க்கலாம்.

## II. தேவகுடும்பத்தில் ஒருவராய் இருப்பதற்குள்ள மகிமை:

இங்கிலாந்து நாட்டில் ஒரு சிறந்த குடும்பம் உண்டு. இளவரசர் சார்லஸ், இளவரசி டயானா, அவர்க ளின் இரண்டு குமாரர்கள் அதின் வாரிசு. அந்தக் குடும்பத்தில் பிறப்பது இங்கிலாந்தில் மிகப்பெரிய கௌரவம்.

முழு உலகிலும், ஒரு சிறப்புக் குடும்பம் உண்டு. அதில் அங்கம் வகிப்பது தனித்தன்மை வாய்ந்தது; ஏனெனில் அந்த வழியை மிகச் சிலரே கண்டறிவர் என தீர்க்கதரிசனம் உள்ளது (மத்.7:14). சுவிசேஷம் கேட்டு கீழ்படிந்தோர் எல்லா மனிதரைவிட அதன் அங்கமாகும் மகிமை பெற்றுள்ளனர்.

### ஆ. குடும்பத்தை அடையாளப்படுத்துவது:

இந்த உலகில், தேவகுடும்பத்தை பிரதிபலிப்பவர்கள் என்ற மகிமை நமக்கு உண்டு.

எங்கள் குடும்பம், இந்தியாவில் புதுடெல்லிக்கு குடிபெயர்ந்தபோது, அங்கு இருந்த இலட்சக்கணக்கான மக்களில் நாங்கள் மட்டுமே புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்கள் என்பதில் நாங்கள் துல்லிய நோக்கமுடையவர்களாயிருந்தோம். எங்களை சுற்றி இருந்தவர்களும், எங்களை பார்க்க வந்தவர்களும், தேவன் உயிரோடு வாழ்வதின் பிரதிநிதித்துவத்தைக் கண்டனர். எங்கள் வாழ்வும், எங்கள் நடத்தையும், எங்கள் பேச்சும் குடும்ப (தேவ) சாயலை பிரதிபலிக்க வேண்டும் என்பது எங்களுக்கு மிக முக்கியமாக தோன்றினது; ஏனென்றால் நாங்கள் செய்யும் ஏதாவது தவறுகளை திருத்திக் கொள்ளும்படியாக அவர்கள் எப்பொழுதுமே இன்னொரு கிறிஸ்தவரை அணுக மாட்டார்கள் என்ற நிலைமை இருந்தது.

ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் இக்கடமை உண்டு. உங்கள் அயலகத்தில் உள்ளவர்களிடம், நீங்கள் கிறிஸ்துவை பிரதிப்பளிப்பவர்கள் என்றும், அவருடைய நடவடிக்கைகளை போதிப்பவர்கள் என்றும் காட்ட வேண்டும்.

### ஆ. பெயரை தரித்துக்கொள்ளுதல்:

நம் ஒவ்வொருவருக்கும் நம்முடைய சொந்த பெயர் மிக முக்கியம். "திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்துகொள்ளப்படத் தக்கது; பொன் வெள்ளியைப் பார்க்கிலும் தயையே நலம்" (நீதி.22:1).

தேவனுடைய பெயரை சிந்தித்துப் பாருங்கள்! அதில் உள்ள நிறைவு, நன்மை, பரிசுத்தம் ஆகியவை நித்தியமாய் நிலைநிற்பதைப் பாருங்கள்!

தேவனுடைய எந்த செயலும் அவருடைய பெயருக்கு கலங்கம் ஏற்படும்படி இல்லை. நம்மில் உள்ள கறைப்பட்ட (பாவ) பெயரை எடுத்துவிட்டு, அவருடைய பரிசுத்த பெயரை நமக்கு கொடுத்துள்ளார். இந்த மகிமைக்காக நாம் எவ்வளவு உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். "கிறிஸ்தவர்" என்ற பெயரின் புனிதத்தைக் காத்துக்கொள்ள நாம் எவ்வளவு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். மேலும் அந்த பெயருக்கு நம்முடைய செயல்களால் அவமானம் ஏற்படாமல் காக்க வேண்டும்.

**இ. குடும்ப அதிகாரத்தோடு பேசுதல்:**

இந்த உலகில் நமக்கு ஒரு வேலை இருக்கிறது என்றும், இரட்சிப்பின் நற்செய்தியை இவ்வுலகிற்கு கொடுக்கவேண்டிய கடமை நமக்கு உண்டு என்றும் 2ம் பாடத்தில் படித்தோம். இதற்கு **நாம் தேவனுடைய செய்தித் தொடர்பாளர்களாய் (spokesman) உள்ளோம்.** "ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக் கொண்டு புத்தி சொல்கிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்" (2கொரி.5:20).

நாம் மனிதர்கள் என்பதை அறிந்த தேவன், நாம் போதிக்க வேண்டிய செய்தியை நம்முடைய சொந்த மனதிலேயே உருவாக்கும் பொறுப்பை நமக்குக் கொடுக்கவில்லை. அவர் அதை வார்த்தைகளில் எழுதி, புதிய ஏற்பாடாக, நம்மை வழிநடத்தும்படியாக அதை பாதுகாத்துள்ளார்.

ஆதலால், என்னுடைய பிதாவுக்காக நான் பேசும்பொழுது நேர்மையாக அவரை நான் வெளிப்படுத்த வேண்டும். அவர் தன்னுடைய வார்த்தைகளில் எவைகளை கூறியுள்ளாரோ, அவைகளையே நானும் கூற வேண்டும். அவருடைய செய்தியோடே எதையும் சேர்க்கவோ, விட்டுவிடவோ, மாற்றி அமைக்கவோ எனக்கு அதிகாரம் இல்லை. சமீபத்தில் தேவனுடைய குடும்பத்தின் ஒற்றுமை மற்றும் 'ஒரே குடும்பம்' பற்றி ஒரு மனிதனிடம் பேசிக் கொண்டிருந்தபோது, அவர் கூறியது, "உங்களுடைய நம்பிக்கை மிகவும் குறுகியதாக இருப்பதாக நான் காண்கிறேன்" என்றார்.

ஒரு கிறிஸ்தவன், தன்னுடைய பிதாவின் சுத்தமான செய்தியை பிரசங்கிக்கும்போது எல்லாம், எப்பொழுதுமே அவனுக்குக் கிடைக்கும் பதில் இதுதான். "ஒடுக்கமான போதனை", "குத்துகின்ற செய்தி", "கடினமான போதனை" ஆகியவை அவனுடைய தேர்வு இல்லை. அவன் தனிப்பட்ட முறையில் எவ்வளவு லாவகமாக இருக்க விரும்பினாலும், அவனையோ, பிறரையோ திருப்திப்படுத்த தேவனுடைய அறிவுரைகளை திருத்த அவனுக்கு அதிகாரம் இல்லை.

ஆகையினால், ஒரு கிறிஸ்தவன் எப்பொழுதுமே தேவனுடைய பரிசுத்த வார்த்தைகளையே போதிக்க வேண்டும். மேலும், அவர் உறுதியோடு, தேவன் சொன்ன எதையும் நான் செய்வேன் என்று கொஞ்சமும் சந்தேகமின்றி செய்யனும்.

"என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்." (யோவான் 12:48) என்று இயேசு எச்சரித்தார்.

தேவனும் அவருடைய வார்த்தைக்கே கட்டுப்பட்டவர் என்பதை சில நேரங்களில் மனிதர்கள் மறந்து விடுகின்றனர். ஒரு "உயிலோ" "பிரமாணமோ" அந்த உயில் எழுதியவரின் மரணத்தினால் உறுதியாக்கப்படுகிறது; அதனால், அதின் ஒரு வார்த்தையைக்கூட அதன்பின், அந்த உயில் எழுதியவரோ, அதன் பயனடைபவரோ நினைத்தாலும் மாற்ற முடியாது. கிறிஸ்துவின் மரணம், புதிய ஏற்பாட்டை மாற்ற முடியாததை சீல் வைத்து விட்டது. (எபி. 9:16); மேலும் "சகோதரரே, மனுஷர் முறைமையின்படி சொல்லுகிறேன்; மனுஷர்களுக்குள்ளே உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை ஒருவனும் தள்ளுகிறதுமில்லை, அதினோடே ஒன்றையும் கூட்டுகிறதுமில்லை." என்று கலா.3:15 கூறுகிறது. ஆகையால், நாம் நம்முடைய பிதாவின் வார்த்தைகளை அது எழுதப்பட்ட வண்ணமாகவே பேச வேண்டும்; மேலும் அவர் சொல்லியவைகளை சரியாக செய்வார் என்று முழு நிச்சயத்துடன் நாம் போதிக்கலாம்.

## III. குடும்பத்தின் ஒற்றுமை :

தன்னுடைய குடும்பத்தை குறித்து தேவனுடைய விருப்பம், அது முழுமையான ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்பதே! தான் மரிக்கும் முன்னதாக, இயேசு செய்த மறக்க முடியாத ஜெபம், "நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல் லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்" (யோவான் 17:20,21).

### அ. சகோதரர்களுக்குள் அன்பு

கிறிஸ்துவின் மார்க்கத்தினுடைய தனிச் சிறப்பே, சரீர குடும்பங்களில் எப்படிப்பட்ட உறவு உள்ளதோ, அதேபோல் உறவு ஆவிக்குரிய குடும்பத்திலும் உண்டு. மனித குலத்தை தேவன், அன்பினால் அணுகினார். ஆகையால், நாம் அவரைப்போல மாறும்போது, அன்பின் மனோபாவத்தைக்

கற்றுக்கொள்கிறோம். உண்மையில், தன்னுடைய மரணத்திற்கு கொஞ்சம் முன் இயேசு கூறினார், "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார்" (யோவான் 13:34,35) "தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்" (1யோ.4:12). "தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?" அன்பினுடைய பெரிய பகுதி ஒருவரிலொருவர் சகிப்புத்தன்மை மற்றும் மன்னிப்பு உடையது. சிறுபிள்ளைத் தனமான மக்கள், மற்றவர்கள் மீது எப்பொழுதுமே குற்றங்களை கண்டுபிடிக்க முயல்வர். இது ஒரு நேர்மையான கிறிஸ்தவனுடைய அன்பின் மனோபாவம் கிடையாது. "ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபே.4:32). கிறிஸ்தவர்கள் மற்றவர்களை அன்புகூரவும், அன்புகூரப் படவும் அணுகுகிறார்கள்; அவர்கள், ஒருவர் மற்றவருடைய சிறப்புகளை நம்புகிறார்கள்.

**ஆ. நம்பிக்கையிலும் நோக்கத்திலும் ஒற்றுமை**

ஒரே ஒரு சுவிசேஷம் தான் உண்டு. உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டவரின் நாளிலும், தேவனுடைய குடும்பம் ஒரே மாதிரியின்படி ஆராதிக் கிறது. எந்த ஒரு கிறிஸ்தவரும், எந்த ஒரு பிரசங்கியாரும் ஒரு பிராந்திய திருச்சபையில் இருந்து இன்னொரு பிராந்திய திருச்சபையில் வைக்கப் பட்டாலும், அவர் ஒரு அந்நியனைப் போல் உணரமாட்டார். அவர் தன் நாட்டில் கேட்ட அதே சுவிசேஷம் தான் கேட்பார். அவர் எங்கு சென்றாலும் அதே அன்பு மற்றும் ஐக்கியத்தையும், சகோதரரிடம் ஒரே நோக்கத்தையும் அவர் காண்பார். இப்படிப்பட்ட குடும்ப ஒற்றுமையை தான், தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

**இ. ஒருவர் மீது ஒருவர் அக்கறைப்படுதல்:**

தேவனுடைய குடும்பத்தில் அன்பு இருக்கும்போது, ஒருவர் மீது ஒருவருக்கு அக்கறை தானாகவே வரும். "என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்"

(1 யோவான் 3:18) என்று கூறுகிறது. அநேக நேரங்களில் தேவனுடைய குடும்பத்திலும் கூட நாம் அமைதியை (சாந்தம்) அன்போடு ஒப்பிடுகிறோம். அவர்கள் என்னவாக இருக்க வேண்டுமோ அதிலிருந்து குறைவுபடும்போது, சகோதர, சகோதரிகளுக்கு உற்சாகம் தேவைப்படுவது நமக்குத் தெரியும். அல்லது அவர்களுடைய செயலை சரிசெய்யும் வார்த்தைகளோ, அறிவுரையோ தேவை. ஆனால், அவர்களை சரிசெய்ய நாம் பேசும் அநேக வார்த்தைகளினால் ஏற்படும் பாதகமான விளைவுகளை எண்ணி, நாம் அவர்களின் நல்லுறவை வேண்டி நாம் அமைதியாக இருந்து விடுகிறோம். அவர்கள், தங்களுடைய ஆத்துமாவையும் தங்களுடைய குடும்பத்தார்களின் ஆத்துமாக்களையும் இழந்து போவதை அமைதியாகப் பார்த்துக் கொண்டு, ஒன்றும் பேசாமலிருக்கும் நாம், உண்மையில் அவர்கள் மீது அக்கறை கொண்டுள்ளோமா? உண்மையில் அவர்களை நேசிக்கிறோமா? அன்புடன் கூடிய அக்கறை என்பது, 'பேச' வேண்டும். ஒருவேளை அதைப்பெறும் நபர் நம் சகோதர, சகோதரியாக இருந்தாலோ, வசனத்திற்கு கீழ்படியாத அந்நியராய் இருந்தாலும் அது அவர்களால் கேட்கப்படவும் வேண்டும். நித்திய விளைவுகளை அறிந்திருந்தும் நாம் பேசாமல் இருக்கக்கூடாது.

**ஈ. குறைபாடுகள்**

குடும்பத்திற்கான அன்பின் இலக்கு, அக்கரை மற்றும் ஒற்றுமை ஆகியவற்றிற்கான தேவ திட்டம் மிகச் சரியானது. ஆனால் அந்தக் குடும்பம் மனிதர்களால் ஆனது; மற்றும் அந்த மனிதர்கள் குறைபாடு உள்ளவர்கள். முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களிடம் இருக்கும் குறைபாடுகள் போக, கிறிஸ்தவ வளர்ச்சியின் நிலைகளிலும் குறைபாடுகள் உண்டு. இயற்கையாகவே, ஒரு குடும்பத்தில் 10 அல்லது 15 வருடங்கள் உள்ள ஒருவருக்கு இருப்பதைப் போல், புதிய கிறிஸ்தவருக்குள் தகப்பனின் சாயல் உறுதியாக இருக்காது.

ஆகையால் நாம் ஒவ்வொருவருக்குள்ளும் உள்ள மனிதக் குறைபாடுகளை பொறுத்துக் கொண்டு, நம்முடைய உறவுமுறையில் தனிப்பட்ட குற்றங்கள் ஒரு வடுவாக இராதபடி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பதிலும், மன்னிப்பதிலும் ஆர்வம் காட்ட வேண்டும். அதே நேரத்தில், நாம் எவ்வளவு தூரம் பொறுத்துப் போகிறோமோ, குடும்பத்தில் உள்ள இளமையான மற்றும் பெலவீனமான அங்கத்தினர்களுக்கு அதே அளவு உண்மையான வழிகாட்டுதலும், அறிவுரையும் கொடுக்க வேண்டும்.

சிலநேரங்களில் குடும்பங்கள் தங்கள் நடக்கையில், இருக்கவேண்டிய தரத்திற்கு இல்லாமல் இருக்கலாம். தேவனுடைய குடும்பத்தில் ஒரு திருச்சபை அன்பினுடைய ஆழம் தேவையான அளவு இல்லாமல் இருக்கலாம்; அல்லது

வெளிப்படுத்தவேண்டிய அளவு அக்கறை காட்டாமல் இருக்கலாம்; அல்லது செய்ய வேண்டிய வேலையை செய்யாமல் கண்மூடித்தனமாக இருக்கலாம். ஒருவேளை அது உபதேசத்தின்படி சரியாக இருந்தாலும், ஆவிக்குரிய வகையில் தவறானதாக இருக்கலாம். இப்படிப்பட்டவர்களைப் பார்த்து இயேசு சொல்லுவார், "ஆனாலும் நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத் தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்" (வெளி.2:4,5).

**உ. அப்பாவை (தேவனை) நம்புங்கள்:**

தேவன் தன்னுடைய பிள்ளைகளை தண்டித்து, அழித்துவிட ஆர்வமுள்ளவரல்ல. அவருடைய ஆசை எல்லாம், நம்மை நேசித்து, உதவிசெய்து, மன்னிப்பதே ஆகும். அவருடைய இரக்கம் செல்ல முடியாத அளவுக்கு, தேவனுடைய திட்டத்தை (சட்டத்தை) மக்கள் விட்டுவிடும்போதுதான், அவர்கள் இறுதியில் அழிந்துபோகின்றனர். அநேக நேரங்களில், கிறிஸ்தவர்கள் தேவனை சந்தேகிக்கின்றனர். பொதுவாக, அவர்கள் அவர் இருக்கிறாரா என்றோ, அவருடைய உலகத்திற்கான அன்பையோ சந்தேகிப்பதில்லை. அவருடைய வல்லமையை அவர்கள் சந்தேகிப்பதில்லை. ஆனால், அவர்கள் அவருக்கான தங்களுடைய முக்கியத்துவத்தையே சந்தேகிக்கின்றனர்; மேலும் தங்களுடைய ஜெபங்களுக்கு அவரால் செவிகொடுக்க முடியுமா என்றும் அவர்களுடைய இருதயம் ஐயம் கொள்கிறது.

சில நேரங்களில், கிறிஸ்தவர்கள் கூட நியாயந்தீர்ப்புக்கு பயப்படுகின்றனர். அவர்கள் குறையுள்ளவர்கள் என்றும், அவர்களுடைய பாவத்தின் குற்றஉணர்வை உணர்ந்தும் உள்ளனர். அவர்கள் வெளிச்சத்தில் நடக்க முயற்சி செய்தாலும் இப்படிப்பட்ட மனதுடன் உள்ளனர். கிறிஸ்துவின் இரத்தத்தின், தொடர்ச்சியான கழுவுதல் என்பதை அவர்கள் மறந்துவிட்டனர். தேவனுடைய இரக்கத்தைப் பற்றிய வாக்குத்தத்தங்களை அவர்கள் எண்ண மறந்துவிட்டனர். நியாயந்தீர்ப்பில் தங்களுக்கு ஒரு இரட்சகர் தேவையில்லை என்பதைப் போலவும் அவர்கள் மனதளவில் நல்லவர்களைப் போலவும் இருக்க முயலுகின்றனர்.

நம்மை நாமே நியாயந்தீர்த்துக் கொண்டு, பின்பு பயந்தும் இருக்கும் நம்முடைய தன்மையை தேவன் அறிவார். ஆனால் தேவன், "இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?

தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல், நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?

தேவன் தெரிந்துகொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்.

ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிற வரும் அவரே.

உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப் போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும்..” (ரோ.8:31-35) என்ற வார்த்தைகளின் மூலம் நமக்கு நம்பிக்கைக் கொடுக்கிறார். மிகவும் விலையேறப் பெற்ற பரிசை, தேவன் நமக்கு ஏற்கனவே கொடுத்துள்ளார்; அதாவது அவருடைய குமாரன் அவர் நமக்கு ஏற்கனவே கொடுத்ததுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாம் அவரிடம் கேட்கும் அல்லது விரும்பும் எதுவுமே சிறியதாகத்தான் இருக்கும். ஆகையால், அவர் நமக்கு கிறிஸ்துவுடன் கூட மற்ற எல்லாவற்றையும் கொடுப்பாரா என சந்தேகம் கொள்ளலாமா?

தேவன், மேலும் விளக்கும்போது: நாம் சோதனையில் இருக்கும் இந்த நியாயத்தீர்ப்பு காட்சியில், தேவன் நம்முடைய இடத்தை தான் எடுத்துக் கொண்டு, நியாயந்தீர்க்கப்பட்டவராயிருக்கிறார்; மேலும், நாம் பாவமே இல்லாதவர்களைப் போல் மாற்றினார்; மேலும் நம்முடைய ஆத்துமாவிற்கென அந்த விலையைக் கொடுத்தவராகவும், நமக்காக பரிந்துபேசி நம்மை பாதுகாக்கும் வழக்குரைஞராகவும் இயேசு நமக்குப்பின் இருக்கிறார்.

ஆகையால், தேவன் கேட்கும் கேள்வி : இப்படி ஒரு வரிசை இருக்கும்போது, தேவனுடைய பிள்ளைக்கு எதிராக பேசி, குற்றம்சாட்டுபவன் யார்? யார் தேவனுடைய பிள்ளையை அழிக்கும்படி வகை தேடுவான்?

தேவனுடைய குடும்பமாக, இத்தகைய உறுதி நமக்கு இருக்கிறபடியால், இந்த உலகில் உதவிசெய்து அக்கறை காட்டும்படியான அவருடைய வாக்கை நாம் நம்ப வேண்டும். எந்த உண்மையான தகப்பனும் தன்னுடைய பிள்ளையினிடத்தில் பொய் சொல்ல மாட்டார். மேலும் தேவன் தன்னுடைய வார்த்தையைக் காப்பார்.

### IV. பரலோக இருப்பிடத்திற்கு தயாராகுதல்:

இந்த உலகில் வாழும்போது நமக்கு நிறைய கடமைகள் இருந்தாலும், நம்மை நாமே நித்திய உலகத்திற்கும் தகுதிப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

**அ. உலகப் பொருட்களில் இன்பங்கள்:**

நம்முடைய சரீரத்தை நாம் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமே. அதை சுத்தம் செய்ய வேண்டும், உணவு கொடுக்கனும், உடை உடுத்தனும், அதற்கு பாதுகாப்பான வீடு தேவை. அதற்கு ஓய்வும் தேவை. நமக்கு குடும்ப உறவுகளும், நண்பர்களும் உள்ளனர். இவை இயற்கையானதுதான். மேலும் சரியானதும் கூட. நம்முடைய நேரத்திலும் கவனத்திலும் ஒரு பகுதியை இவைகளுக்குத் (இந்த பந்தங்களுக்கு) தரத்தான் வேண்டும்.ஆனால் எல்லாம் சமச்சீராக இருக்க வேண்டும். ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய எல்லா ஓய்வு நேரத்தையும் டிவி பார்ப்பதிலும், விளையாடுவதிலும், பிற செயல்களைச் செய்வதிலும் செலவழித்தால், அவனுடைய வாழ்வு ஆவிக்குரிய வகையில் சமச் சீராக இராது. நம்மை நாமே கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொண்டும், இந்த உலகத்தின் பாவச் செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்போமாகில் அது மாய்மாலமாக இருக்கும்!

நம்முடைய இருதயத்தை நாமே ஆராய்ந்து சில கேள்விகளைக் கேட்டு, நம்முடைய பதில்கள் நேர்மையாக இருக்குமாயின், நாம் அந்த பரலோக உலகில் வாழ ஆயத்தமாகிக் கொண்டுள்ளோமா என்று நமக்கு தெரியும்? நம்முடைய இன்பம், இப்பொழுது இந்த உலகில் இருக்குமானால், நாம் நித்தியமாய் சந்தோஷத்தோடே இருக்க முடியுமா?

**ஆ. குடும்ப விருப்பங்களை தெரிந்திருக்க வேண்டும்:**

நான் ஆராதிக்க ஆர்வத்துடன் உள்ளேனா? வார நாட்களனைத்திலும் ஆவிக்குரிய வேலைகளைச் செய்ய ஆர்வத்துடன் உள்ளேனா? மற்ற வர்களுக்கு பேரதிக்க எனக்கு ஆர்வம் உள்ளதா? என்னுடைய வீட்டில் என் பிள்ளைகளுக்கு போதிக்க எனக்கு ஆர்வம் உள்ளதா? நான் தேவனுடைய வார்த்தையை வாசிக்க விரும்புகிறேனா? மற்ற கிறிஸ்தவர்களோடு இருக்க விரும்புகிறேனா? இவற்றை கற்று, பூர்த்தி செய்ய வேண்டும்.

**இ. தகுதியில்லையெனில்**

ஒரு கிறிஸ்தவரல்லாதவரின் துணையை நான் தேர்ந்தெடுத்தால், ஒரு வேத ஆராய்ச்சி செல்வதற்கு பதிலாக நான் கிரிக்கெட் விளையாட சென்றால், தேவனுக்கு காணிக்கை கொடுப்பதற்கு பதிலாக கெட்ட காரியங்களுக்கு காசை விரயம்பண்ணினால், கிறிஸ்தவ நடவடிக்கைகளை நான் சுயவிருப்பத்துடனும், சுவராஸ்யத்துடனும் செய்யாமல், கடனுக்கு செய்தால் நான் எப்படி "பரலோக வாசியாவேன்" என்று நினைக்க முடியுமா? என்னுடைய சரீர வாழ்க்கை முழுவதும், நான் உலகக் காரியங்களையே முக்கியத்துவப்படுத்தினால், ஆவிக்குரிய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் உலகில் நான்

எப்படி நிரந்தரமாய் சந்தோஷமாய் காணமுடியும்! அநேகர் பரலோகம் செல்ல மாட்டார்கள்; ஏனெனில் அவர்கள் உண்மையில் பரலோகம் செல்ல விரும்பவில்லை என்று நான் நினைக்கிறேன்.

## V. திவ்விய சுபாவத்திற்கு பங்காளிகள்:

ஒரு நல்ல கிறிஸ்தவனாக மாறும் இது மேலோட்டமான வளர்ச்சி அல்ல; இது ஒரு ஞாயிறு தின மாற்றம் அல்ல; அல்லது அடித்தோல் மாற்றம் அல்ல. தேவனுடைய குடும்பத்தில் பிறக்குமுன் நாம் மனித சுபாவத்திற்கு ' .. ' ளிகள். நம்முடைய மனோநிலை, பண்பு, செயல்பாடுகள் அனைத்தும் அந்த சுபாவப்படி இருந்தன. ஆனால் நம்முடைய பிறப்பினால் (ஞானஸ்நானம்) நாம் புது உரு எடுத்துள்ளோம்; அது நம்முடைய பிதாவின் சுபாவம். இது மனித சுபாவம் அல்ல; மாறாக தெய்வீக சுபாவம். உண்மைதான், முதலில் நாம் குழந்தைகளாக இருந்தோம்; நாம் நம்மையே நன்றாக நடத்திக் கொள்ளவில்லை. 2 பேதுரு 1:4, "இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப் பட்டிருக்கிறது" என்று சொல்லுகிறது. தேவசுபாவத்திற்கு பங்காளிகளாக மாறக் கற்றுக்கொள்வதில் உள்ள ஒரு அழகிய அம்சம், இந்த உலகின் அநேக ஆபத்துக்கள் மற்றும் குறைபாடுகளில் இருந்து நாம் காக்கப்படுகிறோம். நம்மை சுற்றி பரவி உள்ள இச்சைகளுக்கு நாம் விலகியிருப்பதால், நாம் "உலகத்தினால் கறைபடாமல்" தப்பிக் கொள்கிறோம். என்னிடத்தில் தவறுகளும் பெலவீனங்களும் இருக்கலாம். ஆனால் இந்த உலகின் தீமையான மற்றும் துன்புறுத்தும் சக்திகள் என்னை தன்பக்கம் இழுக்க முடியாது! அந்தப் பாவங்களை செய்யும்படியான சோதனைகளை எதிர்த்து எனக்கு போராட்டம் இல்லை; ஏனெனில் தெய்வீக சுபாவத்திற்கு புது உருப்பெற்ற நான், அந்த இச்சையான கறைகளுக்கு தப்பித்துக் கொண்டேன்.

## VI. குடும்பத்தில் ஊட்டமளிக்கப்பட்டு, அக்கறை காட்டப்பட்டோம்:

தேவனுடைய குடும்பத்தில் நாம் ஒருவருக்கொருவர் காட்டிகொள்ளும் அக்கறையுடன் கூட, தேவன் தாமே நம் ஒவ்வொருவர் வாழ்விலும், "அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர். 8:28) என்ற வாக்கு நிறைவேற அக்கறை கொண்டுள்ளார். நமக்கு கொடுக்க வேண்டும் என்ற காரணத்திற்காக, தேவன் - மக்கள், நிகழ்வுகள், உடமைகள், அரசாங்கம், இயற்கை போன்ற எதையும் பயன்படுத்தலாம்.

இதோடு கூட, தன்னுடைய பிள்ளைகளைக் காக்க தேவன் தூதர்களை பயன்படுத்துகிறார். "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?" (எபி.1:14).

**இறுதியாக.....**

ஆகையால் நாம் தேவனுடைய குடும்பத்தில் இருக்கும்போது, நாம் அன்பு மற்றும் ப்பாதுகாப்பான நிலையில் உள்ளோம். நாம் சகோதரர்களாக கிறிஸ்துவுக்குள் பகிர்ந்து கொள்ளும் ஒற்றுமையில் சத்துவம் உள்ளது. உலகில் உள்ள மற்றவர்களைவிட நாம் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்!

*கேள்விகள்:*

1. ஆவிக்குரிய குடும்பத்தில் உள்ள உறவு என்ன?
2. நாம் யாருடைய சாயலை தரிக்க வேண்டும்?
3. உலகில் நாம் யாரை அடையாளப்படுத்த வேண்டும்?
4. குடும்பப் பெயரை தரித்துக் கொள்வதில் உள்ள முக்கியத்துவம் என்ன?
5. தேவனுடைய செய்தியை சொல்லலாமா? வேண்டாமா? என்ற வாய்ப்பு நமக்கு உள்ளதா?
6. தேவசெய்தியை, நம்மையோ/பிறரையோ பிரியப்படுத்த நாம் மாற்றிக் கொள்ளலாமா?
7. ஒரு கிறிஸ்தவரை அடையாளப்படுத்தும் குணநலன்கள் யாவை?
8. ஒரு கிறிஸ்தவ உறவினால், அக்கறை அல்லது அமைதி; இதில் எது மிக அவசியம்?
9. நாம் பரலோகத்தில் சந்தோஷமாக இருப்போமா? இல்லையா? என நமக்கு எப்படித் தெரியும்?
10. தெய்வீக சுபாவத்திற்கு நாம் பங்குபெறும்போது, எதற்கு தப்புகிறோம்?



# மாம்சத்தில் அவருடைய சாயலில்

## *(IN HIS IMAGE, PHYSICALLY)*

புறக்குறிப்பு – OUTLINE

**அறிமுகம் : மனிதனின் படைப்பு**

**I. ஆதி. 1:26**

அ. தேவனுடைய சாயல்?

ஆ. கீழ்காண்பவை தேவனுக்கு இருப்பதாக விளக்கப்பட்டுள்ளார்.

1. கண்கள் - உபா. 11:12
2. காதுகள் - எண். 11:18
3. வாய் - எண். 12:8
4. முகம் - யாத். 33:20
5. கைகள் - யாத். 13:3
6. புயம் (Arm) - உபா.11:2
7. பின்பக்கம் (Back) - யாத்.33:23
8. பாதம் - மத்.5:34,35

**II. மாம்ச குடும்ப சாயல் (உருவம்)**

(கணவன், மனைவி, குழந்தைகள்)

அ. முக பாவனைகள்

ஆ. உடை அணிதல்

1. பொதுவான தோற்றம்
2. தரம்

**III. ஆவிக்குரிய குடும்ப சாயல்**

அ. பாவங்கள்

ஆ. உடையணித்ல்

இ. உடமைகள்

**இறுதியாக,**

"நான்" என்ற கதாப்பாத்திரத்தில் ஒருவேளை நான் ஒரு குடும்ப அங்கத்தினராக இராமல் இருந்தால், அதற்கு மாறாக, கிறிஸ்து அந்த இடத்தை பூர்த்தி செய்தால், அவர் அதிரடி மாற்றங்களை ஏற்படுத்துவாரா?

# மாம்சத்தில் அவருடைய சாயலில்

**பாடம் - LESSON**

**I. ஆதி. 1:26-27**

"பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோ மாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன் களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.

தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும்பெண்ணுமாக அவர் களைச் சிருஷ்டித்தார்" (ஆதி1:26,27).

"தேவனாகி கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" (ஆதி.2:7).

**அ. தேவசாயல்?**

பூமியிலிருந்து மண்ணை எடுத்து, வடிவமைத்து, அதில் தேவன் தன்னுடைய சுவாசத்தை ஊதியபோது மனிதன் ஜீவன் பெற்றான். அப்படியானால் எந்த விதத்தில் மனிதன் தேவசாயலாயிருக்கிறான்? ஒருவேளை அவன் மாம்சமும், சரீரப்பிரகாரமுமாய் தேவசாயலானவனா?

**(ஆ) தேவனுக்கு உள்ள உறுப்புகள் என சொல்லப்பட்டவை**

மனிதனுக்கு உள்ள அநேக அவயவங்கள் தேவனுக்கும் உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

**1. கண்கள்:** "அது உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம், வருஷத்தின் துவக்கம் முதல் வருஷத்தின் முடிவுமட்டும் எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதின்மேல் வைக்கப் பட்டிருக்கும்" (உபா.11:12).

**2. காதுகள்:** "நீ ஜனங்களை நோக்கி: நாளைக்காக உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள்; நீங்கள் இறைச்சி சாப்பிடுவீர்கள்; எங்களுக்கு இறைச்சி சாப்பிடக் கொடுப்பவர் யார் என்றும், எகிப்திலே எங்களுக்குச் சௌக்கியமாயிருந்தது என்றும், கர்த்தருடைய செவிகள் கேட்க அழுதீர் களே; ஆகையால், நீங்கள் சாப்பிடும்படி கர்த்தர் உங்களுக்கு இறைச்சி கொடுப்பார்" (எண்.11:18).

**3. வாய்:** “என் தாசனாகிய மோசே அப்படிப் பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்.

நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்; இப்படியிருக்க, நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச, உங்களுக்குப் பயமில்லாமற் போனதென்ன என்றார்” (எண்.12:7,8).

**4. முகம்:** “நீ என் முகத்தைக் காணமாட்டாய்; ஒருமனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக் கூடாது என்றார்” (யாத்.33:20).

**5. கைகள்:** “அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: நீங்கள் அடிமைத்தன வீடாகிய எகிப்தி லிருந்து புறப்பட்ட இந்த நாளை நினையுங்கள்; கர்த்தர் பலத்த கையினால் உங்களை அவ்விடத்தி லிருந்து புறப்படப்பண்ணினார்; ஆகையால் நீங்கள் புளித்த அப்பம் புசிக்க வேண்டாம்” (யாத்.13:3).

**6. புயம்:** “உங்கள் தேவனாகிய கர்த்தர் செய்த சிட்சையையும், அவருடைய மகத்துவத்தையும், அவருடைய பலத்த கையையும், அவருடைய ஓங்கிய புயத்தையும்” (உபா.11:2).

**7. பின்பக்கம்:** “பின்பு என் கரத்தை எடுப்பேன்; அப்பொழுது என் பின்பக்கத்தைக் காண்பாய்; என் முகமோ காணப்படாது என்றார்” (யாத்.33:23).

**8. பாதம்:** “நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; பரிச்சேதம் சத்தியம்பண்ணவேண்டாம்; வானத் தின்பேரில் சத்தியம்பண்ணவேண்டாம், அது தேவனுடைய சிங்காசனம். பூமியின்பேரில் சத்தியம்பண்ணவேண்டாம், அது அவருடைய பாதபடி” (மத்.5:34,35)

தேவன் ஆவியாயிருக்கிறார்; மேலும், அவருக்கு மாம்ச சரீரம் கிடையாது. அதனால் அவருடைய ஆவிக்குரிய தோற்றம் என்னவென்றும், மனிதனுடைய மாம்ச சரீரம் தேவனுடைய ஆவிக்குரிய நிலையோடு எப்படி ஒத்துள்ளது என்றும் நமக்குத் தெரியாது. ஆனால் நாம் தேவனைப் போல் தான் படைக்கப் பட்டுள்ளோம் என்று சொல்ல பல வழிகள் உள்ளன.

## II. சரீரப்பிரகாரமான குடும்ப சாயல் :

பிள்ளைகள், அவர்கள் பெற்றாரின் சாயலை வம்சவழியில் சுதந்தரிப்பது மட்டுமன்றி, வருடக் கணக்கில் ஒன்றுசேர்ந்து வாழ்வதினாலும் சில சரீர ஒற்றுமையைப் பெறுகின்றனர்.

‘புருஷனும், மனைவியும் ஒரே மாதிரி இருக்கிறார்கள்’ என்ற சொல்வதை எப்பொழு தாவது கேட்டதுண்டா? ஆச்சரியம் என்ன தெரியுமா, அப்படி இருப்பது உண்மைதான். அவர்கள் முகபாவங்கள் ஒன்றாயிருப்பதினாலோ,

செயல் பாடுகளினாலோ மட்டுமல்ல, அவர்களுக்குள் இருக்கும் உள்ளான விருப்பமும்தான்.

**அ) முக பாவனைகள் :**

முக பாவனைகள் கண்டறிய கற்றறிந்த ஒரு மனிதருக்கு, எங்கள் உள்ளத்தில் என்ன இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளும்படியான ஒரு திறந்த புத்தகம் தான் எங்கள் முகம். பெலமும், தீர்மானமும் எங்கள் நாடி மற்றும்ட உதடுகளை பெலப்படுத்தும்; மேலும் பெலவீனமும், நிலையற்றத் தன்மையும் இவ்விடங்களில் வெறுமையை வெளிக்காட்டும். சுயத்தை மையமாகக் கொண்டிருந்தாலும், சுய பரிதாபமும் முகத்தில் ஆழமான தழும்புகளாக பிரதிபலிக்கும். தாழ்வு மனப்பான்மை என்பது உதட்டில், கண் பார்வையில், கையசைவில், நடப்பதில் மற்றும் உடல் அசைவிலேயே தெரிந்துவிடும். மேலும் நல்ல மற்றும் கெட்ட அநேக உணர்ச்சிகளை கண்களில் இருந்து கண்டுபிடித்து விடலாம்.

ஒரு கணவனும், மனைவியும் சேர்ந்தே இருப்பதினால் எப்பொழுதும் அவர்களுடைய தனித்தன்மைகள் ஒரே வண்ணமாக இருக்கும். ஒருவருடைய மனோபாவம் இன்னொருத்தரை பாதிக்கும். எந்த அளவிற்கு என்றால், அவர்களுடைய முகம் ஒரே மாதிரியாக தெரியும் அளவுக்கு.

இதே விளைவு பிள்ளைகள் மீதும் இருக்கும். எப்பொழுதுமே வியாதியுடன் இருக்கும் ஒரு பெண்ணை எனக்குத் தெரியும். மேலும் அவர்கள் தன்னைக்குறித்தே பரிதாபப் பட்டுக் கொள்வார். அந்த பெண் ஒரு வார்த்தைப் பேசுவதற்கு முன், சிரிப்பு இருக்க வேண்டிய இடத்தில் அவளுடைய வாயைச் சுற்றிலும் ஒரு எதிர்மறையின் ஆவிதான் தெரியும். அந்த பெண்ணுக்கு ஒரு இளம் மகள் இருக்கிறாள். கொஞ்சகாலம் அவள் தன்னுடைய தாயைப் போல இல்லை. ஆனால், நாட்கள் செல்ல செல்ல அந்த பிள்ளைகள் அச்சு பிசகாமல் அவளுடைய தாயைப் போல மாறினாள்.

**ஆ) உடை அணிதல் :**

ஒரு கணவனும், மனைவியும் தாங்கள் உடுத்தும் உடையிலும் கூட ஒன்றிணைந்தவர்களாக மாறுவார்கள். ஆரம்பத்தில், ஒருவர் மற்றவரை விட சுத்தமாக உடையணிபவராக இருக்கலாம். மேலும் ஒருவர் மற்றவரைவிட தன்னை நன்றாக அடையாளப்படுத்துபவராக இருக்கலாம். ஆனால் வருடங்கள் செல்லச் செல்ல அவர்கள் உடையணியும் தரமும், வெளிப்புற பொது தோற்றமும் கிட்டத்தட்ட ஒன்றாகவே தெரியும்.

இப்படி இரண்டு பேரின் அம்சங்கள் ஒன்றாக மாறுவது என்பது இயல்பாக நடக்கும் ஒன்றாகும். சில நேரங்களில் சிலரைப் பற்றி நாம், "அவர்கள் ஒன்றாக

வாழ்கிறவர்கள் போல, அவர்களைப் பார்த்தா தெரியவில்லையே!" என்றும் சொல்லுவோம். பொதுவாக, சிலரைப் பார்த்து, நாம் அவர்கள் ஒன்றாக இருப்பவர்கள் என அறிந்து கொண்டாலும், மிக நெருக்கமாக ஆய்வு செய்து பார்த்தால் அவர்களுக்கு இருக்கும் தனிப்பட்ட வித்தியாசங்களைக் காண முடியும்.

## III. ஆவிக்குரிய குடும்ப சாயல்:

நம்முடைய ஆவிக்குரிய குடும்பத்தில் நாம், நம்முடைய பிதா மற்றும் மூத்த சகோதரனுடைய சாயலில் வளருகிறோம்.

இதிலும் தாக்கம் நேரடியாக நம்முடைய புறத்தோற்றத்தில் பாதிக்காமல், நம்முடைய உள்ளான வாஞ்சை (ஆவிக்குரிய நிலையில்) புறத்தோற்றத்தில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

**அ.பாவனைகள்**

எல்லா கிறிஸ்தவர்களுக்கும் ஒரு நல்ல பயிற்சி, கண்ணாடி முன்பாக நின்றுகொண்டு நிறைய முகபாவ்னைகளை வெளிப்படுத்திப் பார்ப்பது தான். ஒரு தூய்மையான, நிரம்பி வழியும் அன்பு எப்படி என் தோற்றத்தை பாதிக்கும்? கோபம் என்ன மாதிரி மாற்றம் உண்டுபண்ணும்? வெறுப்பினால் என் கண்கள் நிறைந்திருக்கும் போது அது எப்படி இருக்கும்? மனதுருக்கம் இருந்தால்? என்னுடைய சிரிப்பு அலைகள் எங்கே?

இவைகள் பயன்படுத்துகையில் அழகாக வெளிப்படுத்தப்படுகிறதா? இல்லை யெனில், தேடினாலும் கிடைக்காத நிலையில் உள்ளதா? என்னுடைய முகம் கவலை தோய்ந்து உள்ளதா? அல்லது என் முகத்தில் சமாதானம் மற்றும் பாதுகாப்பு தெரிகின்றதா?

ஒரு மனிதன் தன்னுடைய புறத்தோற்றத்தை அழகாகக் காட்டும்படியாக, தலையை வாரிக்கொள்வதும், சவரம் (Shave) செய்வதும் முக்கியமானதே! அதேப்போல்தான், ஒரு பெண்ணும் தன் முகத்தை ஒவ்வொரு நாளும் பாதுகாக்க வேண்டும். தேவன் அணிந்து கொள்ளும் பாவனைகளுக்கு ஏற்றாற்போல் நம்முடைய மனோபாவம் மற்றும் விருப்பங்களை மாற்றிக் கொள்ள வேண்டியது மிக அவசியம்.

**ஆ. உடை உடுத்துதல் :**

குடும்ப சாயலில் நாம் வளரும்போது, தேவன் தான் என்னுடைய தந்தை என்று சொல்ல, என்னுடைய ஆடைகள் கூட உதவும். துணியின் மதிப்பு, விலை, தயாரிப்பாளரின் புகழ் இவை யெல்லாம் பார்க்காமல், கிறிஸ்தவன் தான் செலவழிப்பதை ஒரு சமநிலைப்படுத்த முடியும். அவன் நல்ல மற்றும்

நாகரீகமான உடைகளை உடுத்துவான், ஆனால் எஞ்சிய பணத்தை விரையம் செய்யாமல் தேவ வேலைக்கு செலவழிப்பான். தேவனுடைய செல்வாக்கை நம்முடைய உடைகள் கூட அடையாளப்படுத்தும் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். பாரீஸில் இருந்து வந்த நவீன வடிவமைப்பு என்னுடைய கீழாடை எவ்வளவு குட்டை மற்றும் மேலாடை எவ்வளவு இறக்க கழுத்துடையது என்பதைக் காட்டுகிறதா? அல்லது அடக்கத்தைப் பிரதிபலிக்கும் ஒரு மனசாட்சி என்னுடைய ஆடையில் பிரதிபலிக்கிறதா? நடுரோட்டில் இறுக்கமான ஆடையுடனும், கடற்கரையோரம் நீச்சலாடை போன்றவை என்னுடைய விருப்பமாக உள்ளதா? திடீரென்று மாம்சத்திலேயே தேவனுடைய சிங்காசனத்திற்கு முன் நான் அழைத்து வரப்பட்டால் இந்த ஆடைகளுடனேயே சென்று நிற்பேனா?

**இ.உடைமைகள்**

மற்ற பொருட்களை வாங்குவதிலும் இதே சமநிலைக் காணப்பட வேண்டும். இதேப் போன்ற சமநிலைமற்ற பொருட்களை வாங்குவதிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். தேவ பிள்ளைகளாகிய நாம், "இந்த உலகம் என்னுடைய வீடு அல்ல" என்பதை நினைவில் வைத்திருந்தால், நாம் இந்த உலகில் சொத்துக்களை சேர்ப்பதில் ஆர்வம் காட்ட மாட்டோம்.

மாமிச தேவைகளாகிய உணவு, உடை மற்றும் உறைவிடம் நமக்கு தேவை என்று தேவனுக்குத் தெரியும். ஆனால் கிறிஸ்தவன் தன்னுடைய சரீரம், வீடு மற்றும் உடைமைகளை தேவ ஊழியத்திற்கென கருவிகளாக பயன்படுத்தலாம். நம்முடைய “பொருட்களே” நம்முடைய எஜமான்களாக மாறி, நாம் அவைகளுக்கு சேவை செய்கையில் இந்த பிரச்சனை பெரிதாகி விடும். இது அடிக்கடி நடக்கிற ஒன்றுதான். அதாவது, தேவனுடைய நேரத்தையும், வேலைகளையும் நாம் திருடிக்கொண்டு அவற்றை நமக்காக செலவழிப்பது.

**ஈ.நடவடிக்கைகள்**

நாள் முழுவதும் என்னுடைய மாம்சம் எங்கேயாவது பிரதிப்பலித்துக்கொண்டே இருக்கும். அது நான் பிரதிபலிக்கும் நல்ல விளைவோ, கெட்ட விளைவோ, ஆனால் ஏதாவது ஒன்று இருக்கத்தான் செய்யும். மேலும், நான் தரித்துக் கொண்டிருக்கும் பெயருக்கு நான் உண்மையாயிருப்பேனேயாகில் என்னுடைய பிரசன்னம் நல்ல விளைவை உண்டு பண்ணும். என்னுடைய சரீரத்தை கேள்விக்குரிய இடங்களுக்கு எடுத்துச் செல்ல மாட்டேன். மேலும் என்னுடைய தந்தையை (தேவன்) மகிமைப்படுத்தாத எந்த ஒரு செயலிலும் ஈடுபடமாட்டேன்.

**இறுதியாக...**

கிறிஸ்தவர்களாக நாம் சில நேரங்களில் நம்மை சுற்றி இருக்கும். உலகத்தில் உள்ள நன்மை தீமைகளை பிரித்துப் பார்ப்பதில் நமக்கு கடினம் உண்டு. முக்கியமாக, நமக்கு பெலவீனமாக இருக்கும். காரியங்களுக்காக நாம் நிறைய நியாயப்படுத்தும் காரணங்களைக் கூறுகிறோம்.

இந்த மாற்றத்தை நாம் ஏற்படுத்தினால், நம்முடைய அநேக தீர்மானம் எடுக்க முடீயாத நிலை மாறிவிடும். அப்பொழுது, "நான்" என்ற இந்த குடும்ப அங்கத்துவத்தை நான் ஏற்கவில்லை என்றும், மாறாக, அதை கிறிஸ்து பூர்த்தி செய்துள்ளார் என்றும் உணருவேன். அப்படியானால், என்னுடைய முக பாவனைகளில், என்னுடைய உடைகளில், என்னுடைய வீட்டில், என்னுடைய செயல்பாடுகளில் அவர் ஏதும் அதிரடி மாற்றங்களை ஏற்படுத்துவாரா?

**பாடக் கேள்விகள்**

1.படைப்பிலே, மனிதனை உருவாக்கியதை தேவன் எவ்வாறு விளக்குகிறார்?

2.ஆதி.2:7ல் மனிதன் உருவாக்கப்பட்டதில் எந்த 3 பாகங்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது?

3.தேவனுக்கு இருப்பதாகக் கூறப்படும் இயல்புகள் யாவை?

4.தேவன் ............................................

5.ஒரு கணவனும் மனைவியும் காலப்போக்கில் ஒரே மாதிரி இருப்பதற்கு (முகபாவணை கள்) எது உதவி செய்யும்?

6.ஆவிக்குரிய பிள்ளைகளாக நாம், எவ்வாறு தேவனைப் போல நம்முடைய முகபாவணை களில் வளர முடியும்?

7.உடை உடுத்தும் நம் விரும்பத்தை எந்த 2 வழிகளில் அவர் (தேவன்) கட்டுப்படுத்து கிறார்?

8.என்னுடைய உடைமைகளை அவர் எவ்வாறு கட்டுப்படுத்துவார்?

9.என்னுடைய செயல்பாடுகளை அவர் எவ்வாறு கட்டுப்படுத்துவார்?

10. கிறிஸ்தவ வாழ்வில் தீர்மானம் எடுக்க முடியாத நிலையை முடிவுக்கு கொண்டு வர எளிய வழிகள் உண்டு. அவை யாவை? நீங்கள் அவற்றை பயிற்சி செய்கிறீர்களா?



# மனதளவில் அவருடைய சாயலில்

## *(IN HIS IMAGE, MENTALLY)*

**புறக்குறிப்பு – OUTLINE**

**அறிமுகம்:**

உயிரினங்களுக்கு மனது கொடுக்கப்பட்டுள்ளது. மனிதன் அதில் தனித்தன்மை வாய்ந்தவன்.

**I. தகவல் பரிமாற்றம் (Communication)**

அ. மற்றவருடைய மனதை "கண்டறிதல்"

ஆ. எண்ணங்கள்

இ. வார்த்தைகள்

**II. அவருடைய மனதைப் பற்றி தேவன் எவைகளை வெளிப்படுத்தி யுள்ளாரோ அவைகளில் இருந்து நாம் தேவனை தெரிந்து கொள்ளலாம்.**

1. அவருடைய மகத்துவம்
2. அவருடைய வல்லமை
3. ஒழுங்கின் மீதான அவருடைய அன்பு
4. வர்ணத்தின் மீதான அவருடைய அன்பு
5. சப்தத்தின் மீதான அவருடைய அன்பு
6. வாசனையின் மீதான அவருடைய அன்பு
7. சுவையின் மீதான அவருடைய அன்பு
8. சுத்தத்தின் மீதான அவருடைய அன்பு
9. திட்டமிடுதலின் மீதான அவருடைய அன்பு
10. வடிவமைப்பின் மீதான அவருடைய அன்பு
11. அழகின் மீதான அவருடைய அன்பு
12. சமாதானத்தின் மீதான அவருடைய அன்பு
13. வகைகளின் மீதான அவருடைய அன்பு
14. ஆச்சர்யத்தின் மீதான அவருடைய அன்பு

**III. தேவனுடைய எண்ணங்களை மனிதன் மட்டுமே பகிர்ந்து கொள்ள முடியும். (சங்.139:17)**

அ. இப்படிப்பட்ட காரியங்களை அறிந்து, ஆராய்ந்து உணர முடியும்.

ஆ. இந்த ஒத்த மனது தேவனுடைய முகபாவங்களை அறிந்து கொள்ள முடியும்.

**IV. தேவன் வார்த்தைகளின் மூலமும் தன்னுடைய மனதை வெளிப்படுத்தியுள்ளார்**

அ. வார்த்தைகளை வாசிக்கும் திறனை மனிதனுக்குக் கொடுத்துள்ளார்.

ஆ. வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டு மனிதனால் கொள்கைகளை புரிந்து கொள்ள வேண்டும்.

இ. அந்த வார்த்தைகளுக்கு பதிலளிக்கும்படியாக அவனால் யோசித்து பகுத்தறிய முடியும்.

ஈ. மனிதனால் நல்லதையும் கெட்டதையும் உணர்ந்தறிய முடியும்.

உ. அவனுடைய மனசாட்சியில் தேவனுடைய அச்சு உள்ளது.

ஊ. தன்னுடைய சித்தத்தை தேவனுடைய விருப்பத்திற்கு தானாக மாற்ற முடியும்.

எ. தன்னுடைய பிதாவின் சாயலுக்கு ஏற்ப தன் மனதை அவனால் உருவாக்க முடியும்.

**இறுதியாக,**

இந்த தனித்துவம் வாய்ந்த பரிசு மனிதனுக்காக மட்டுமே உரியது. அநேகர் செய்வதைப் போல இது வீணாக்க முடியாத ஒரு மிகப்பெரிய பொக்கிஷம். இதில் எத்தனை பேர் தேவனிடமாய் தங்கள் மனதைத் திருப்புகின்றனர்?

# மனதளவில் அவருடைய சாயலில்

**பாடம் - LESSON**

**அறிமுகம் :**

உடலின் மற்ற பாகங்களில் உள்ளது போன்ற அணுக்களால் உருவாக்கப்பட்ட மூளையானது மட்டும் எவ்வாறு யோசித்து, பகுத்தறிந்து முடிவுகளை எடுக்க முடியும்? பகுத்தறிய உதவும் ஒரு சிறந்த பண்பு மனதிற்கு உண்டு. மிருகங்களுக்கும் மனது உண்டு.

ஒரு குறிப்பிட்ட அளவுக்காவது மிருகங்களால் யோசித்து, உணர முடியுமா? சிலர் அப்படித்தான் சொல்கிறார்கள். மேலும், மிருகங்கள் கற்றுக்கொண்ட பயிற்சியின் மூலம் தான், யோசிக்கும் திறன் உடையது போல் தெரிகிறது.

ஆனால் மனிதனைப் பொறுத்தமட்டில், மனிதனால் என்ன சிந்தித்து செயல்பட முடியும் என நாம் யூகித்து, ஆச்சரியப்பட அவசியமில்லை. மனிதனுடைய மனது எவ்வளவு தனித்தன்மையும், அற்புதமுமான தேவனுடைய பரிசு என்பதை அறிய, இந்த உலகில் மனிதன் கொண்டு வந்துள்ள மகத்தான மாற்றங்களைப் பார்த்தே அறியலாம்.

## I. தகவல் பரிமாற்றம்:

மனித மனதின் தகவல் பரிமாற்றங்கள் பல வகைப்படும்.

சரீர அசைவுகளும், தோற்றங்களும், குறிப் பாக மனிதனுடைய முகபாவங்களும் அவ னுடைய மனதில் சிந்தனையை வெளிக்காட்டக் கூடியதாக இருக்கிறது. ஓர் அறைக்குள்ளே, ஒரு தாய் தன் கண்களினாலேயே, எச்சரிக்கைகள் மற்றும் பாராட்டுகள் ஆகியவற்றை பரிமாற முடியும். மேலும் அவனைச் சுற்றியுள்ள காரியங்களும் அவனுடைய செயல்களும் அவனுடைய மனதை நமக்கு வெளிக்காட்டுகிறது.

அவனுடைய எண்ணங்களை "கண்டறிய" அனுமதியளிக்கப்படுவதின் மூலம் கூட நம்மால் இன்னும் சிலவற்றை அறிய முடியும்.

எண்ணங்கள் வார்த்தைகளினால் வெளிப்படும். ஆதாமுடைய முதல் வார்த்தை, மனிதனுடைய முதல் மொழி அவனுக்கு தேவனால் கற்பிக்கப்பட்டது.

## II. படைப்பின் மூலம் தேவனை அறிந்து கொள்ளுதல் :

தேவனுடைய சாயலில் நாம் வளர எடுக்கும் முயற்சிகளில், அவருடைய மனதை போல நாம் மாறவேண்டும் என்றால், தேவனுடைய மனதை தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

நம்மைச் சுற்றியிருக்கும் தேவனுடைய கரத்தின் கிரியைகளில் இருந்தே நாம் தேவனைப் பற்றி அதிகமாக தெரிந்து கொள்ளலாம்.

ஆகாயத்தின் எல்லையில்லா நிலையைப் பார்த்த பின்பும், யாரால் தேவனுடைய மகத்துவத்தை உணராதிருக்க முடியும்? இங்கே இருக்கிற எல்லாவற்றையும், நம்முடைய பார்வைக்கும் அப்பால் உள்ள எல்லாவற்றையும், மனிதனுக்கு இன்னும் புரியாத புதிராக இருக்கும். எல்லாவற்றையும்கூட தேவன் படைத்துள்ளார். அவர், ஆகாயத்தில் அநேகமாயிரம் பொருட்களை திட்டமிட்டு வைத்து, அவை பிரயாணம் செய்ய தனிப்பாதையையும் வைத்து, அவையனைத்தும் சக்தி குறையாமல், ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளாமல் இருக்கும்படி செய்துள்ளார்.

சமுத்திரத்தின் கரையோரத்தில் நின்று, அதின் அலைகள் பாறைகளின் மீது மோதுவதைப் பார்க்கும்போது நாம் தேவனுடைய வல்லமையை உணருகிறோம். “சமுத்திரம் புரண்டு வந்தபோது அதைக் கதவுகளால் அடைத்தவர் யார்? .... நான் அதற்கு எல்லையைக் குறித்து, அதற்குத் தாழ்ப்பாள்களையும் கதவுகளையும் போட்டு; இம்மட்டும் வா, மிஞ்சி வராதே; உன் அலைகளின் பெருமை இங்கே அடங்கக் கடவது என்று யோபுவிடம் 38ம் அதிகாரத்தின் தேவன் கூறுகிறார். “அவர் அந்தரத்திலே பூமியை தொங்க வைக்கிறார்” என்று யோபு 26ம் அதிகாரத்தில் சொன்னதில் இருந்தே, தேவன் இந்த பூமியின் மீது கொண்டுள்ள வல்லமையை யோசித்துப் பாருங்கள். அவர் சரியாக எங்கு பூமியை வைத்தாரோ, அங்கேயே இருந்து கொண்டு, வருடத்திற்கு ஒரேமுறை சூரியனை சுற்றிக் கொண்டு, தினந்தோறும் கண்ணில் காண முடியாத வகையில் தன்னையே சுற்றிக் கொண்டிருப்பது தேவனுடைய மகத்தான வல்லமையினாலேயே.

இந்த உலகம் இயங்கும்படியான சட்டங்களும், திட்டங்களினாலும் மட்டுமே தேவனுக்கு ஒழுங்கின்மீது உள்ள நேசத்தைக் காட்டுகின்றது. இயற்கையின் சட்டங்கள் ஒரு திட்டத்தின்படி வேலை செய்கின்றது. இந்த திட்டங்கள் அனைத்தையும் மனிதன் படித்து, கற்றறிந்து இவையனைத்தும் “இயற்கை நியதி” தான் சொல்லும் வண்ணமாக அவையனைத்தையும் இயற்கை சரியாக செய்வதை அறிந்துள்ளான். ஒவ்வொரு உயிரினத்திற்குள்ளும் செயல்படும் அனைத்தும் (உடல் செயல்பாடுகள்) தேவனுக்கு ஒழுங்கின்மீது உள்ள நேசத்தைக் காட்டுகின்றது. நம்முடைய இரத்த நாளங்களும், சுவாச நிலைகளும், செரிமான உறுப்புகளும் ஒரே ஒழுங்கின்படி மிக நேர்த்தியாக வருடந்தோறும் கோளாறும், பிரச்சனையும் இல்லாமலும் செயல்படுகின்றன.

பொதுவாக காணப்படும் “மரம்” போன்றவற்றில் கூட தேவனுடைய வல்லமை மற்றும் ஒழுங்கு வெளிப்படுத்தப் பட்டிருப்பதைப் பாருங்கள். தண்ணீர் மற்றும் சத்துப் பொருட்கள் பூமியில் இருந்து வேர்களின் வழியாக, சுமார் 60 முதல் 100 அடி வரை மரத்தின் தண்டுப் பாகம் வரை; மேலும் மரத்தின் ஒவ்வொரு கிளையின் நுனிப்பகுதிவரை சென்று ஒரு மரத்திற்கும் ஊக்கமளிக்கிறது. ஒவ்வொரு மரத்திலும், ஒவ்வொரு உயிர்வாழும் செடியிலும் அமைதியாக, கோளாறில்லாமல் வேலை செய்யும் இந்த வல்லமையான உந்தும் கருவிகளை (pumping systems) நினைத்துப் பாருங்கள்!

நிறத்தின் மீதான தேவனுடைய நேசத்தை நாம் எல்லா இடங்களிலும் பார்க்க முடியும். ஒருவேளை இந்த உலகத்தை வெறும் கருப்பு வெள்ளையாகப் படைக்க அவர் தேர்வு செய்திருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. அவர் ஆயிரக் கணக்கான நிறங்களை ஒன்று சேர்த்து, அவற்றை முறைப்படுத்தி, வித்தியாசப்படுத்தி உலகில் உள்ளவற்றை உருவாக்கினார். ஒரு சரணாலயத்தில் உள்ள பறவைகளின் நிறங்களைப் பாருங்கள். சூரிய அஸ்தமனம் மற்றும் மனித உடல் உறுப்புகள் போன்றவற்றைப் பொருத்திப் பாருங்கள். ஆகாய ப்ரவுனும், பூமி நீலத்தை உடையதாக இருந்தால் எப்படி இருக்கும் என நினைத்துப் பாருங்கள். அவர் படைத்தவைகளுக்காக் சரியாக பொருந்தும் வகையில் நிறங்களை தேவன் பூமியை படைக்கும்போது கொடுக்கவில்லையா? பூமியை அதிகப்படியான

பச்சை நிறத்தினாலும, ஆகாயத்தை (வானம்) பெருவாரியாக நீல வண்ணத்திலும் படைத்துள்ளாரல்லவா?

சப்தம் அல்லது ஒலியின் மீது தேவனுக்கு உள்ள அன்பை நாம் உணர்ந்திருக்க வேண்டும். ஒரு பறவையின் பாடலில் உள்ள தூய்மை மற்றும் தெளிவை நம்மால் கேட்க முடியும். ஒரு குழந்தை தன்னுடைய தாயைக் கூப்பிடுகையில் உள்ள அன்பின் இனிமையை நம்மால் கேட்க முடியும். காற்றின் அசைவை, நதியின் பாட்டை, புயலின் உருண்டோடும் இடியை நம்மால் கேட்க முடியும். ஒவ்வொரு மிருகத்திற்கும் ஒவ்வொரு பறவைக்கும் தனித்தன்மை வாய்ந்த சப்தம் உண்டு. அவை ஒவ்வொன்றும் எவ்வளவு வித்தியாசமானவை; எனினும் ஒன்றிணைந்து தேவனுக்கு அவை செலுத்தும் துதி எவ்வளவு அழகானது!

வாசனைகளை தேவன் விரும்பி, பாராட்டுகிறார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? உண்மையிலேயே இப்படிப்பட்ட விருப்பம்தான். ரோஜாவின் இனிமையான நறுமணம் தோன்றவும், கார்டனியாவின் இனிமையான நற்கந்தம் மற்றும் "பீச்" என்ற பொருளில் உள்ள வாயில் தண்ணீர் ஊறச் செய்யும் மணம் உண்டாகக் காரணமாக அமைந்திருக்கும்.

வாசனையை நுகரும் தன்மைக்கு நெருங்கிய சொந்தம் தான் நம்முடைய சுவைக்கும் தன்மை. சுமார் 40 வருடங்கள், இஸ்ரவேல் மக்களுக்கு தேவன், ஒரு உணவை வனாந்தரத்தில் கொடுத்தார். அந்த ஒரே விதமான உணவை அவர்கள் சாப்பிட்டு வெறுத்துப் போனார்கள். எகிப்தில் அவர்கள் சாப்பிட்ட நல்ல உணவு மற்றும் வெங்காயம் ஆகியவற்றை நினைவுகூர்ந்து தேவனிடம் புலம்பினார்கள். சப்தத்தின் தனித்தன்மை மற்றும் வித்தியாசப்பட்ட நிறங்கள் ஆகியவற்றைப் போலவே சுவைகளும் அதிகம் உண்டு.

நீங்கள் தேவனுடைய சுத்தத்தையும், அவருடைய பராமரிப்பையும் பற்றி நினைத்துப் பார்த்துள்ளீர்களா? இந்த பூமியை அப்படியே விட்டு வைத்திருந்தாலே, இதை நாம் மனிதர்கள் அழகாக வைத்துக் கொள்வதைவிட பூமி சுத்தமாக இருந்திருக்கும். மனிதர்களாகிய நாம் தான் எல்லா வகையான குப்பைகளையும் உண்டுபண்ணி, எல்லா இயற்கை மூலதனங்களையும் அழித்து வருகிறோம். ஆனால், தேவனுடைய வடிவமைப்பிலே, ஒரு மரமோ, ஒரு மிருகமோ மரித்துப்போனால், அதினுடைய உடல் பக்குவப்பட்டு ஒரு

இயற்கை உணவாக மறுசுழற்சிப் பெறுகிறது. தேவன் இயற்கையை சமச்சீராக உருவாக்கியிருப்பதினால் எதுவுமே பயனற்றுப் போகாமல் ஒன்றை ஒன்று சார்ந்து உள்ளன. ஏன் கழுகுகள் கூட, தேவனுடைய சுழற்சித் திட்டத்திலே பெரும் பங்கு வகிக்கின்றது. சமுத்திரம்கூட அப்படியே விடப்பட்டால், தன்க்குள் உள்ள எதையும் சுழற்சித் திட்டத்தினால் நிர்வகித்தோ, அல்லது அவைகளை கரையில் தள்ளியோ சீராக இருக்கும். மனிதக் கழிவுகள் விடப்படாத ஒரு நதி, தன்னைத்தான் சுத்தமாக வைத்திருக்கும்.

தேவனுடைய உலகில், இன்னொரு வகையான சுத்தமும் உண்டு. எல்லா உணவு வகைகளுக்கும் சரியான பாதுகாப்பைக் கொடுத்து, சாப்பிட அவற்றை கிருமிகளிலிருந்து பாதுகாத்து, புதிதாக (Fresh) அவற்றை தேவன் வைக்கின்றார். மேலும் இவை எல்லாவற்றையும் அவர் எவ்வளவு அருமையாக பாதுகாத்துள்ளார். ஒரு மென்மையான - பளபளப்பான ஆப்பிள், ஒரு சதையைப்போன்ற தோள் நிறைந்த வாழைப்பழம் போன்றவற்றை நினைத்துப் பாருங்கள். எத்தனை வகையான வடிவங்கள், நிறங்கள், வாசனைகள், ஏன் அழிந்து போகும், எறிந்து விடப்படும் நம்முடைய பிளாஸ்டிக் போன்ற தற்காலிகமானவைகளுக்குக் கூட பலவகையான இப்படிப்பட்ட தன்மைகள் உண்டு. அவற்றின் முதல் நோக்கத்தை தேவனுடைய மறைப்பானது நிறைவேற்றியவுடன், அவை பூமியை வளப்படுத்தும்படி அதனுள் செல்கின்றன.

**தேவனுக்கு திட்டமிடுதலின் மீதுள்ள நேசத்தை** நினைத்துப் பாருங்கள். ஒரு மரத்தினுடைய தண்டை உணர்ந்து பாருங்கள்; ரோஜா இதழின் மிருதுத் தன்மையை, ஒரு மிருதுவான ரோமமுடைய கீரி இன விலங்கின் பட்டுத் தன்மையை பளிங்குக் கல்லினுடைய (Marble) வழுவழுத் தன்மையை உணர்ந்துள்ளீர்களா? ஒரே மனது இவை எல்லாவற்றையும் உண்டாயிருக்கக் கூடுமல்லவா?

**தேவனுடைய மிகச்சிறந்த நேசத்தில் ஒன்றுதான் வடிவம்** (design). குளிர்ந்த காற்று அடிக்கும் நேரத்தில், நாம் ஒரு டஜன் பனிமலர்களை பார்க்க முடியும். அவை அனைத்தும் வித்தியாசமானதாக இருப்பினும், சீராக இணையுள்ள வடிவமாக இருக்கும். ஏன் தேவன், ஏதோ ஒரு பனிமலர் கூட்டத்தை உருவாக்கவில்லை? ஏன் இப்படிப்பட்ட சிறிய மற்றும்

முக்கியமில்லாத பொருளுக்கு கூட அதிக கவனம் கொடுத்து ஒரு அற்புதமான வடிவம் தேவன் கொடுத்துள்ளார்.

ஏன், ஒவ்வொரு நுண்ணிய உயிரும், படைப்பின் ஒவ்வொரு அணுவும் ஒரு நுணுக்கமான வடிவத்துடன் படைக்கப்பட்டுள்ளது? இதற்காக பதில், தேவன் தெளிவாக ஒரு ஒழுங்கு விரும்பியாகவும், அவர் படைத்த எல்லா வடிவங்களின் அழகு மற்றும் அருமையான பயன்பாட்டை ரசிக்கக் கூடியவராகவும் இருக்கிறார் என்பதே!

**தேவன் அழகை நேசிப்பவர்** என்று நினைக்கிறீர்களா? உண்மையிலேயே தேவனுடைய கரத்தின் கிரியைகளாகிய அழகின் வடிவங்களை நாம் பார்க்க முடியாத இடமே கிடையாது. உண்மையில் அவர், அழகை பயன்படுத்துவதில் மிகவும் தாராளமானவராகவே இருக்கிறார். ஆனால் நாம் தான் அவைகளை உற்றுநோக்க மறந்துவிடுகிறோம். அல்லது அவைகளை சாதாரணமாகவே எண்ணிவிடுகிறோம். மரங்கள் என்னும் மிக முக்கிய அம்சங்களினால் உண்டான காடுகளும், மலர் கூட்டங்களினால் உண்டான வயல்களும் மிக அருமையானவை.

**தேவன் சமாதானம் (அல்லது) அமைதி விரும்பியாக இருக்கிறார்.** ஒவ்வொரு ஆத்துமாவின் மிக முக்கியமான தேவையாக இந்த அமைதி இருக்கிறது. இதையே தேவனும் உணர்ந்திருக்கிறபடியினாலும், அமைதியின் அத்தியாவசியத்தை அறிந்துள்ளபடியினாலும், அவர் பகலுக்கும், இரவிற்கும் இடையில் உள்ள அந்த குறுகிய நேரத்தை மிகவும் அமைதியானதாகப் படைத்துள்ளார். அந்த நேரத்தில் பறவைகள் அமைதியான,ஓய்வான பாடல்களைப் பாடியும், இரவுப் பூச்சிகள் சுகமான ஒலிகளையும் ஏறெடுக்கின்றன.

நாம் இயற்கை படைப்பை உற்றுப்பார்த்து, **தேவன் பலதரப்பட்டவைகளை (variety) விரும்புகிறார்** என்பதை உணராமல் இருக்க முடியுமா? தேவனுடைய கரத்தின் கிரியைகளில் ஒரு பலமான ஒற்றுமை இருப்பது உண்மைதான். ஆனாலும் அவைகளில் முடிவில்லா வித்தியாசங்கள் இருக்கத்தான் செய்கிறது! ஏன், மனிதர்களில்கூட, இரு முகங்கள் ஒன்றாக இருப்பதில்லை! மேலும் இரண்டு நபரில் கைரேகையும் ஒன்றாக இருப்பதில்லை. ஆகையால், நம்மெல்லாருக்கும் கண்கள், காதுகள், மூக்கு, வாய், 10 கைவிரல், 10 கால் விரல் இருந்தாலும், நம்மெல்லாருக்கும்

தனித்தன்மை உண்டு. மேலும் ஒரு மிருகக் காட்சி சாலையை சென்றுப் பார்த்து அங்கே எத்தனை விதமான மிருகங்கள், பறவைகளையும் நாம் பார்க்க முடியும். அங்கே, எத்தனை விதமான குரங்குகள் உள்ளன. மேலும், கடற்கரை ஓரமாக நடந்து அங்கே உள்ள சிப்பிகளை எடுத்துப் பாருங்கள். அவைகளில் எத்தனை ஆயிரம் விதமானவைகள் உண்டு? மேலும் அவைகளில் எல்லாமே வித்தியாசமான வண்ண அமைப்புகளை உடையது!

**தேவன் வியப்புகளையும் கூட விரும்புவர்!** அநேக சிறிய நட்சத்திரங்கள் ஒரு அண்டமெனும் பூவினை சுற்றி மறைந்திருப்பதை நீங்கள் கிட்டப் பார்த்துள்ளீரா? ஆலோவீரா செடியின் தடிமனான இலைகளுக்குள் உள்ள மருந்தினைப் பார்த்துள்ளீர்களா? கக்கூன் பூச்சியில் இருந்து காலப்போக்கில் வெளிவரும் அழகான உடை அணிந்த வண்ணத்துப்பூச்சியை தேவனே தவிர யார் திட்டமிட்டிருக்க முடியும்?

## III. மனிதன் மட்டுமே தேவனுடைய சிந்தையை பகிர்ந்துக்கொள்ள முடியும்:

இந்த இயற்கையின் சிறப்புகளை நாம் கண்டு, கேட்டு, நுகர்ந்து, ரசித்து, உணர்ந்து பார்க்கும்பொழுது தேவனுடைய அருகாமையை உணர்ந்து பார்க்கின்றோம். எல்லா படைப்புகளிலும் மனிதன் மட்டுமே இந்த படைப்பின் கிரியைகளை ஆராய்ந்து தேவனோடு பகிர்ந்துகொள்ள ஏற்ற மனதை உடையவனாக இருக்கின்றான்.

## IV. வார்த்தையின் மூலம் தேவனுடைய சிந்தனை வெளிப்படுத்தப்பட்டுள்ளது:

படைப்புகளை உணர்ந்து தேவனை அறிந்துகொண்டு அவரோடு உறவுகொள்ளும்படியாக மாத்திரம் விட்டுவிடாமல் அவரை அறிந்து கொள்ளத்தக்காக அவர் மனதை எழுத்தின் மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார். இதுவே தேவனுடன் நம் உறவுக்கான அழகான ஆதாரம்.

**1. வார்த்தைக்ளை படிக்கும்படியான திறனை மனிதனுக்கு தந்திருக்கின்றார்:**

மிருகங்கள் ஒரு சில வார்த்தைகளை அல்லது கட்டளைகளை கற்றுக்கொண்டு கீழ்படிவது உண்டு. கற்றுக்கொண்ட சில பழக்க வழக்கங்களுடன் அவைகளால் சில வார்த்தைகளைப் பொருத்திப் பார்க்க முடியும். ஆனால் மனிதனை போல வேறு எந்த படைப்பும், எழுத் தின் உருவத்தை படிக்கவும், வார்த்தைகளின் வெவ்வேறு ஒலிகளையும் புரிந்துகொள்ள இயலாது. மனிதன் மட்டுமே எழுத்து வடிவங்களைப் பார்த்து, அவைகள்ள அர்த்தமுடைய சில ஒலிகளுடன் (சப்தம்) பொருத்திப் பார்க்க

முடியும். தேவன் தன் மனதை வெளிப்படுத்தும்படியாக மட்டும் இப்படிப்பட்ட ஆற்றலை மனிதனுக்கு கொடுத்திருக்கின்றார்.

**2. நன்மை, தீமைகளை மனிதன் பகுத்துப் பார்க்க முடியும்:**

மனிதன் படைக்கப்பட்டபோது, அவனுக்கு தீமையைப் பற்றிய உணர்வே இருக்கவில்லை. அவன் பூரணமானவனாக, அவனுடைய எண்ணங்கள் சுத்தமானவைகளாக இருந்தன. தேவன் மீது அவனுக்கிருந்த அன்பும் தூய்மையாகவே இருக்கும். மிருகங்களைப் போல தனக்கு கட்டளை யிடப்பட்டவைகளை இயந்திரம் போல செய்யக் கூடியவனாய் மனிதனை படைக்காமல், தேவனுக்கு கீழ்படிவதா, வேண்டாமா என்று தானே விரும்பி, அதை செய்யக்கூடியவனாக, தன் விருப்பத்தை செயலாற்றக் கூடியவனாக மனிதனை தேவன் படைத்திருக்கின்றார். ஆனால் மனிதனோ அநேக வேளைகளில் கீழ்படியாமையை தேர்ந்து எடுத்து பாவத்தை உலகத்திற்கு கொண்டுவந்தான். ஆகையால் எல்லா மனிதரும் நன்மை, தீமை மற்றும் பாவம் ஆகியனபற்றி அறிந்திருந்தனர். ஆனால், நம்முடைய தனிமையிலே தேவன் நம்மை சாட்சிகள் இன்றி விட்டுவிடவில்லை. ஆரம்பத்தில் இருந்தே ஒவ்வொரு மனிதனின் மனசாட்சியும் ஒரு ஒழுக்க உயர்வுள்ள தேவனைப் பற்றியும், அவர் இருக்கிறார் என்பதையும் கூறுகின்றது. தங்களுடைய முயற்சிகள் அறியாமையினாலோ, சத்தியத்தினாலோ, எதினால் எடுக்கப் பட்டிருப்பினும் ஒவ்வொரு மனிதனும் உயர்ந்த வல்லமையுள்ளவரை நோக்குகின்றனர். அதினால்தான், “தவறு மற்றும் சரி” என்பவைகளைப் பற்றிய பொதுவான புரிந்து கொள்ளுதல், உலகம் முழுவதும் ஒன்றாகவே இருக்கின்றது; மேலும் சரித்திரம் முழுவதும் அது இப்படித்தான் உள்ளது.

**3. மனிதன் தன்னுடைய சித்தத்தை தேவ சித்தத்தோடு ஒப்புரவாக்க முடியும்:**

படைப்புகள் எல்லாவற்றிலும் தான் விரும்புவதை செய்யத்தக்க சித்தமுடையவனாக மனிதன் மட்டுமே இருக்கின்றான். அவன் இயற்கையை பார்த்து, தேவனை அறிந்துகொள்ள முடியும். அவருடைய சிந்தை அறிந்து கொள்ளும்படியாக வேதாகமத்தை படிக்க முடியும். தேவனுடைய சித்தத்திற்கு கீழ்படிவதற்கு தன் சித்தத்தை மாற்றிக்கொள்ள இயலும். தேவனடைய குடும்பத்தில் பிள்ளையாகும் படியாகவும், தன் “மனித சுபாவத்தை”விடுத்து “ஆவிக்குரிய” சுபாவத்தை உடையவனாக மாறி, தேவசாயலில் தன் மனதை

மாற்றிக்கொள்ளவும் முடியும்.

**முடிவுரை:**

தேவனை ஒத்த மனதுடையவனாக மாறக்கூடிய கிருபை மனிதனுக்கு மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. இன்றைய தினங்களில் அநேகர் இந்த விலைமதிப்பற்ற கிருபையை பெற்றுக்கொண்டு, பின்னர் நன்றி உணர்வு அற்றவர்களாய் இந்த கிருபையை வளர்த்துக் கொள்ள தவறிவிடுகிறார்கள்.

**பாடக்கேள்விகள்**

1. மிருகங்களுடைய மனதைவிட மனிதனுடைய மனது எவ்வாறு உயர்ந்தது?
2. தகவல் பரிமாற்ற முறைகள் சிலவற்றை குறிப்பிடவும்.
3. இயற்கையில் இருந்து தேவனை நாம் எப்படி அறிய முடியும்?
4. படைப்பின் ஒவ்வொரு அம்சமும் தேவனுடைய எண்ணங்களின் மாம்சீக வடிவமே என்ற உண்மையை விளக்குக.
5. தேவனுடைய எண்ணங்களை வேறு என்ன விசேஷித்த வகையில் நாம் அறிய முடியும்?
6. மனிதன் மட்டுமே செய்தியாக உருவாகும் வார்த்தைகளான ............................ புரிந்து கொள்ள முடியும்.
7. மனிதனுடைய மனசாட்சியில் என்ன அச்சு பதிந்து உள்ளது?
8. மனிதன் செய்யும்படியாக எதைத் தேர்ந்தெடுக்கலாம்?